# போற்றிப்பஃறொடை

# வினா வெண்பா

புத்துரை.

ரிஜிஸ்டர் செய்தது. விலை அணா 8. தபாற் செலவு வேறு.



ஸ்ரீ முருகப்பெருமான்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

——:o:——

# போற்றிப் பஃறொடையும்

## வினா வெண்பாவும்.

### ஸ்ரீமத் - உமாபதிசிவாசாரிய சுவாமிகள்

### அருளியவை.

இவை

திருநெல்வேலிப்பேட்டை

ஸ்ரீ மெய்கண்டான் நிலயத் தருமகர்த்தரும்

திருவருட்பயன் கொடிக்கவியுரையாசிரியரும்

ஆசிரிய பதவியிலிருப்பவரும்

ஆகிய

**ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை செய்த**

**பதவுரை கருத்துரைகளுடன்**

பொன்னேரி

ஸ்ரீமாந்-ரா. சுப்பிரமணிய நாடாரவர்களால்

பொருளுதவி செய்து

சென்னை

மகாலக்ஷ்மி விலாசம் பிரஸில்.

அச்சிடப்பெற்றன.

உரையாசிரியர் பேருக்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

1928.

இதன் விலை அணா 8.

# FOREWORD

## M. R. RY.

## T. V. APPARSUNDARA MUDALIAR AVERGAL,

M. A., L. T. ( Madras ), M. Ed. ( Leeds ),

M. R. A. S., F. B. E. E. ( London ).

*Lecturer in Education,*

*Teachers' College,*

SAIDAPET.

---

This work is one of great value. The sublime truths of Saiva Siddhanta are expressed in such a simple and easy language as will be accessible to the enquiring mind. The auther aims at making easier for the multitude of people the knowledge of Saiva Siddhanta. We are sure this book will have a good circulation among the intellegentia of our country.

We are highly grateful to Mr. R. Subramanya Nadar of Ponneri for having undertaken to publish this work.

T. V. APPARSUNDARA MUDALIAR,

# அபிப்பிராயங்கள்.

—:o:—

திருநெல்வேலி ஹிந்து காலேஜ் தமிழாசிரியரும், வடமொழி வல்லுநரும், சித்தாந்த சாத்திர ஆராய்ச்சி நன்கு கைவந்தவரும், 'சமயஞானம்' பத்திரிகாசிரியருமாகிய

**சிவஸ்ரீ-வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை அவர்கள்.**

—o—

போற்றிப் பஃறொடை யென்பது தமிழிலேயுள்ள சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று. இதன் ஆசிரியர் சைவசித்தாந்த சந்தானாசாரியர்களில் நான்காவது ஆசாரியராகிய கொற்றவன்குடி ஸ்ரீமத் : உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

இந்நூல் ஸ்ரீமத் : உமாபதிசிவாசாரிய சுவாமிகள் தமது ஞானாசாரிய மூர்த்திகளாகிய ஸ்ரீமத் : மறைஞானசம்பந்த சிவாசாரிய சுவாமிகள் தமக்குச் செய்த அநுக்கிரகத்தை நீடு நினைந்து செய்தருளிய தோத்திரநூல். உயிர்கள் முன்னே செய்துள்ள புண்ணிய விசேடத்தால் அவற்றிற்கு அந்தரியாமியாய் இதுகாறும் உள்ளே நின்று உணர்த்திவந்த பரம்பொருளே இப்பொழுது குருவடிவமுங் கொண்டு எழுந்தருளிவந்து ஞானோபதேசம் செய்கின்றதென்னும் சைவசித்தாந்த உண்மையை ஸ்ரீமத் : சுவாமிகள் இந்நூலில் நன்கு விளக்கியிருக்கின்றார்கள். சைவசித்தாந்த உண்மைகளை எளிதிலே உணரவிரும்புகிறவர்கட்கு இந்நூல் மிகுந்த உபகாரமாயிருப்பதுடன், தோத்திரரூபமாயும் இஃதிருத்தலின் இது தன்னைப் பாராயணஞ் செய்பவர்கட்குப் பக்தியை முறுகிவளரச் செய்யச் சாதகமாயு மிருக்கின்றது.

இவ்வரிய சாத்திரத்திற்குப் பொன்னேரி ஆசிரியர் ஸ்ரீமாந் : ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள் இயற்றிய புத்துரையை நான் படித்தேன். இந்தவுரை சைவசித்தாந்தப்படிப்பு மிகவும் அருகிவரும் இக்கால நிலைமை நன்கு உணர்ந்து பதவுரையாக எழுதப்பட்டிருக்கிறது. கற்பவர்கட்கு விஷயங்கள் மனத்திலே பதியும்படி நூலைப் பதினைந்து பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பகுப்பிற்கும் தலைப்புப் பெயர்

கொடுத்திருப்பதுடன் அப்பகுப்பின் உரைக்குக்கீழ் விஷயத்தைத் தெளிவு படுத்தியிருப்பது மிகுந்த உபகாரமாயிருக்கிறது. பிறவுரைகளைப் போலல்லாமல் மூலத்தின் சொற்கிடக்கையளவில் விளக்கவேண்டிய விஷயங்கள் மாத்திரம் விளக்கப்பட்டிருப்பது இப்புத்துரையின் விசேட நலம்.

ஸ்ரீமாந்: பிள்ளையவர்கள், முன்பு திருவருட்பயனுரையினுடன் கொடிக்கவியுரையும் எழுதி வெளியிட்டதுபோல, இப்பொழுது இப் போற்றிப்பஃறொடை யுரையினுடன் வினாவெண்பாவுரையினையும் எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். இவ் வினாவெண்பாவும் ஸ்ரீமத்: உமாபதிசிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த மற்றோர் சித்தாந்த சாத்திரமாகும். சைவசித்தாந்தத்திலே அரிய விஷயங்களாயுள்ள பன்னிரண்டு விஷயங்களைச் சுவாமிகள் வினாவாயிலாக இந்நாலில் வெளியிட்டிருக்கின்றார்கள். சித்தாந்தசாத்திரம் கற்றவர்கட்கு இவ் வினாக்கள் எளிதில் விளங்குவனவாகும்.

ஸ்ரீமாந்: பிள்ளையவர்கள் இவ்வாறே ஸ்ரீமத்: உமாபதிசிவாசாரியசுவாமிகள் அருளிய ஏனைய நான்கு சாத்திரங்கட்கும் புத்துரைகள் எழுதி உபகரிப்பார்களாயின், அச்செயல் வைதிக சைவவுலகத்திற்கு மிக்கபயப்பாடு உடையதாகும். அவ்வாறு செய்யத்திருவருள் சுரக்குமாறு எனது குலதெய்வமாகிய ஸ்ரீ·காந்திமதியம்பா சமேத ஸ்ரீ சாலிவாடீசப்பெருமானுடைய திருவடித்தாமரைகளைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

19-2-1928. வி. சிதம்பரராமலிங்க பிள்ளை.

---

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்

## சிவஸ்ரீ • மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்.

### வெண்பா.

மெய்கண்ட நூலெல்லாம் வேணவா விற்படித்துக்
கைகண்ட மேலோன் கரங்கொண்டு — வைகண்டன்
சீர்புகலு மீசுரமூர்த் திக்கோமான் றேங்குகடற்
பார்புகழ மாறு பரிந்து.

பன்னு தமிழ்ப்போற்றிப் பஃறொடைவெண் பாவுடனே
யுன்னுவினு வெண்பா வுரையெழுதப் — பொன்னுதவி
யச்சிற் பதிப்பித் தளித்தா னதிருசெலா
மெச்சிப் படித்துணர வே.
அன்னையன்யா ரெண்ணி லருங்கலைவி நோதன்
நினையுமா வாக்கி னிகழ்த்தி — வினைபுரியு
மொத்த பெருங்குணமு மோங்குசெல்வ முந்தொகுத்து
வைத்ததமிழ் நூற்பா வலன்.
பொன்னேரி யூரன் புனிதமதன் போசனதன்
பின்னே ரிவர்சுப் பிரமணிய — மன்மதனென்
றுற்றோ னிவன்போ லுதவிசெய்வோ ருண்டெண்ணிற்
கற்றோர் சிறப்பர் களித்து.

———:0:———

கவர்ண்மெண்ட் இந்தியன் வைத்திய கலாசாலை உபந்யாசகர்,
செந்தமிழ் இரத்திநாகரம், மருத்துவமணி
## சிவஸ்ரீ - வல்லை சண்முகசுந்தர முதலியார் அவர்கள்.

———:0:———

### நேரிசை வெண்பா.

———:0:———

போற்றிப் பஃறொடைவி ளுவெண்பாப் புத்துரையை
யேற்றமுட னீந்திங் கிசைபெற்றான் — தேற்றமாய்ப்
பேசுநெல் வேலிமன்னைப் பேருளா னுஞ்சைவ
ஈசுரமூர்த் திக்கவிஞ னே.

———:0:———

ஸ்ரீலஸ்ரீ-யாழ்ப்பாணம் வண்ணைநகர் — சுவாமிநாத பண்டிதரவர்கள்
மாணவர் சைவத்திருவாளர்
## பூ. சமரபுரி முதலியாரவர்கள் இயற்றிய
### ஆசிரியப்பா.

———:0:———

பூமன் றுதை பூவணன் போற்றிடத்
தேமன் மலரடி தூக்கிச் சீர்பெற
மனனுபி ருய்யமாக் கருணை கொண்டே
இன்னருள் சுரக்க ஏரார் மன்றுள்

ஐந்தொழி னடஞ்செ யற்புதக் கூத்தன்
பெத்தான் சாம்பா னுய்ந்திட நீயே
முத்தி கொடுக்க முறையென நீட்டிய
திருமுகம் பெற்ற திருக்கயி லாய
பரம்பரை யெட்டாம் பரமா சாரியன்
இருள்கடிந் துள்ளத் தெழுஞா யிறென
பதார்த்த மூன்றெனப் பகுத்ததூஉ மன்றி
பதிநீ யலவெனப் பகரு ளாளன்
பசுவின் செயலைப் பணித்தருள் பரமன்
பாச மொழிக்கும் பண்பினை யுணர்த்தி
ஆணவ வினையை யகற்றிடு நெறியும்
கன்மச் செயலைக் கலக்கிடு வழியும்
மாயையின் றொழிலை மறித்திடு மார்க்கமும்
உள்ளத் துணர்த்திய உமாபதி சிவன்றான்
பொய்கண் டார்மதம் போயொடுங் கிடவே
பகர்நா லிரட்டிப் பனுவற் றமமுள்
போற்றிப் பஃறொடை வினாவெண் பாவிற்
கோருரை விரித்தன னுலகோர் மெச்ச
நீர்வள மிக்க நெல்வேலி சார்ந்த
பேட்டை யெனும்பேர் பெறுந்திரு மங்கை
நகர்வாழ் வேளாண் நன்மர புதித்தோன்
மேதகு புலவர் மெச்சா றுமுக
நயினார் பிள்ளை நற்றவப் புதல்வன்
இலக்கண விலக்கிய மெழில்பெறக் கற்றோன்
சித்தாந் தத்தைத் தெளிவுறப் பயின்றோன்
திருவருட் பயன்கொடிக் கவிக்குரை தெரித்தோன்
அலகின் மாணவர்க் கரும்பொருள் விளக்கிக்
கண்டிகை நீறுங் கவின்பெறத் தரித்தே
சிவனடி யாரைச் சிவனெனக் காண்போன்
ஈசுர மூர்த்தி யெனுமெழி னாமம்
பெற்ற புனிதன் பெருந்தவத் தோனுரை
பலருங் கற்றுப் பயன்பெற வேண்டி
அரண்ய யாற்றுக் கரையி லிலகும்
பொன்வள மிக்க பொன்னே ரிதனில்

அருணை கிரியார்க் கருளுப தேசம்
'சும்மா இரு' வெனச் சொல்லிய தொல்லோன்
சம்பந்த நீக்கு மெந்தை யறுமுகச்
சிவனார் திருவடி செவ்வி தினகத்தே
மலர்க்கொண்டு மாணுற விளங்கி
சிவாலயத் திருப்பணி சிறப்புறப் பலப்பல
சூழ்ந்து வினைசெயுஞ் சுப்பிர மணியன்
அச்சிட் டதனை அவ்வுரை யுலகில்
மெய்யுரை யாக விளங்குதற் பொருட்டே.

———— :o: ————

உ

திருச்சிற்றம்பலம்.

———— :o: ————

தென்னாட்டுச் சைவசித்தாந்த மகாசமாஜ நிருவாக அங்கத்தவருள் ஒருவரும், அம்மகாசமாஜத்தினின்று வெளிவரும் 'சித்தாந்தம' என்னும் பத்திரிகையின் உதவியாசிரியரும் ஆகிய வித்துவான்
பாரிப்பாக்கம்

## சிவஸ்ரீ - கண்ணப்ப முதலியாரவர்கள் எழுதிய

# அணிந்துரை.

———— :o: ————

'ஆரண மாகமங்க ளருளினா லுருவு கொண்டு
காரண னருளா னாகிற் கதிப்பவரில்லையாகும்.'

என்னும் அருணந்திசிவாசாரியாரது திருவாக்கின்படி, இறைவன் அருள்புரியாதொழியின், ஆன்மாக்கள் எஞ்ஞான்றும் எக்கதியும் எய்தப்பெற மாட்டா என்பதொருதலையாகலின், அருமறைவிரித்த ஒரு பெருங்கடவுள் தனதியற்கைப் பேரருட்பெருக்கத்தால் பற்பலவமயத்துப் பற்பல ஞான நூற்களைப் பற்பலவாற்றான் அருள்புரிந்துள்ளானென்பது அனைவருமறிந்த தொன்றாம். அங்ஙனம்போந்த செந்தமிழ் நூல்களுள் சிவபெருமானொருவனே வழிபடற்பாலனா யிலங்கும் முழுமுதற் கடவுளாமெனக்கொண்ட சைவநன்மக்களாகிய நம்மனோர்க்கும், நந்தஞ்சமய ஞானவரம்புகட்கும் உண்மைத்திருவருள் நூல்களா யிலங்குவன திருநெறித்தமிழ்மறை முதலிய திருமுறைகள் பன்னிரண்டும், சிவஞானபோத முதலிய சைவசித்தாந்த

அருளோத்துக்கள் பதினான்குமாம். இவை தம்முள் "உந்தி களிறு வுயர் போதஞ் சித்தியார். பிந்திருபா வுண்மைப் பிரகாசம் — வந்த வருட், பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு, வுண்மைநெறி சங்கற்ப முற்று" எனப்போந்த இச்சைவசித்தாந்த அருணூல்கள் மெய்கண்ட சாத்திரங்களெனவும், சித்தாந்த சாத்திரங்களெனவும் வழங்கப்பெறூஉம் உண்மைச் சிறப்பான் உயர்ந்து விளங்குகின்றன. "சைவாகமங்களினுள வாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத்தோதிய பொருள்களை யாரா யுமாராய்ச்சியே" இந்நூற்களான் எடுத்துரைக்கப்படுவதாகலின், இவைகள் "மனந்தூயராய் நித்தியா நித்திய வுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடு பேற்றின் அவாமிக்குடையார்"க்கே பயன் பெரிதுடையவா மென்பது. அங்ஙனம், வீடுபேற்றின் அவாமிக்குடையாராதல் முற்செய்தவ விசேடத் தானமைவதொன்றாம். இது பற்றியே "வாழ்வெனுமையல்விட்டு வறு மையாஞ் சிறுமைதப்பித், தாழ்வெனுந்தன்மையோடுஞ் சைவமாஞ் சமய ஞ்சாரும், ஊழ்பெறலரிது சாலவுயர் சிவஞானத்தாலே, போழிளமதியி னானைப் போற்றுவாரருள் பெற்றாரே" என்றும், "புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம வறத்து றைகளவை யடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பல தெரிந்து மாரணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச் சிரப் பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்சைவத், திறத்தடைவ ரிதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்றும் போந்த சிவஞான சித்தித்திருவிருத்தங்கள் எழுந்தனவாமென் பது. இனிப், "பலகலையாக மவேதம் யாவையினுங் கருத்துப் பதி பசு பாசந்தெரித்தல்" என்றெழுந்த புடை நூலாசிரியர் திருவாக்கின்படி உலகின்கட் பலபட விரிந்துகிடக்கும் எல்லாஞான நூல்களானும் எடுத்து ரைக்கப்படும் உலகு, உயிர், கடவுள் என்னும் இம்முப்பொருள்களது உண்மையியல்களை "அங்கை நெல்லிப்பழத்திடை யமுதென" அழகுற எடுத்து விளக்கும் இஞ்ஞானநூற்கள் இலக்கண இலக்கியச் செறிவும், தருக்க வரம்பும் தம்முட்டுலங்க இலங்குவனவாம்.

இவை தம்முள். "வேதம் பசுவதன்பால் மெய்யாக நால்வர், ஓதுதமிழதனினுள்ளுறுநெய் — போதமிகு, நெய்யினுறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான், செய்ததமிழ் நூலின் றிறம்." என வெடு ததுப் போற்றும் பெருஞ் சிறப்புடைய முதனூலாக இலங்குவது மெய் கண்டதேவரியற்றிய சிவஞானபோதமாம், இச்சிவஞானபோதநூற்பொ

ருள் பிற்காலத்தார்க்கு இனிது விளங்குமாறு சகலாகம பண்டிதரென்னுஞ் சிறப்புப் பெயருடைய அருணந்திசிவாசாரியர் விரித்தல் யாப்பான் இயற்றி யருளியது சிவஞானசித்தியாரென்னும் வழிநூலாம். இது "பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, யோர்விருத்தப் பாதி போதும்" எனவும், பாதிவிருத்தத்தா லிப்பார் விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைச் சாருநாளெந்நாளோ," எனவும், "சிவஞான சித்தி சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உறையாணியாய் நிலைபெறுவது" எனவும், "சிவத்திற்குமேல் தெய்வமில்லை, சிவஞான சித்திக்குமேற் சாத்திரமில்லை" எனவும் ஆன்றோரான் நன்கெடுத்துப் போற்றும் மேம்பாடுற்றுத் துலங்குவதாம்.

இவ்விருபெருநூற்களின் பொருளினிது விளங்குமாறு முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தவராய உமாபதிசிவாசாரியரான் இயற்றப்பட்ட அருஞ்சிறப்புடைய புடைநூலாய்த்துலங்குவது சிவப்பிரகாசமாம். இவை நீங்கலான எல்லாம் சிவஞானபோதநூலின் தத்துவநுண் பொருட் பகுதிகளைப் பலவகையானெடுத்து அளவையொடு புணர்த்து இயைபுற விளக்குவனவாம். இங்ஙனம் சைவ சித்தாந்தத் தெள்ளமுதத்தினை யாவரும் பருகியின்புறுமாறு திருநெறித்தமிழ் மறைப்பொருள் மலைவுறுவகையிற் றெள்ளத் தெளியவடித்தெடுத்துரைக்கு மிவைகள், இலக்கண இலக்கிய, தருக்க சாத்திர அறிவு வரப்பெற்றார்க்கன்றி ஏனைய வெள்ளறிவுடையார்க்குப் பொள்ளெனப் புலப்படுவதன்றாம். மற்றிவை தம்மின் பழையவுரைகளும் அவ்வாறே மிகவுமரிய நடையானியன்றிருத்தலின் இக்காலத்து மக்கட்கு ஏற்குமாற்றால் அவ்வரிய பொருள்கள் எளிய வகையில் விளங்கக்கூடிய உரைகள் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. பல்லாண்டுகட்கு முன்னமே சிவஞானசித்திக்கு எளிய நடையானியன்ற பொழிப்புரையொன்று வெளிவந்துலவி மறைந்தது. சில்லாண்டுகட்குமுன் மூ—திருவிளங்கம் என்பவரான் சிங்களத்தினின்றும் வெளிப்போந்த சிவப்பிரகாசப் புத்துரை யொன்று இவ்வகையில் உதவிபுரிந்து வருகின்றது. இந்த நிலையில் திருநெல்வேலியைச்சார்ந்த பேட்டை யென்னும் திருமங்கை நகரம் வித்துவான் த. ஆறுமுக நயினார் பிள்ளை யவர்களது புதல்வரும், தமிழ்ப்புலவருமாகிய ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள் போற்றிப்பஃறொடை, இருவெண்பா என்னும் இவ்விருநூற்களுக்கும் மிகத்தெள்ளிய பதவுரைகள் இயற்றியிட்டார்கள். இவ்வுரைகள் நூலினைக் கண்ணழித் துரைத்தலாகிய ஓரே நெறியுடையவாய் இன்றியமையாத ஓரோவிடத்துக் கருத்தெடுத்து

ரைக்குங் கருத்தோடியைன்றிருக்கின்றன. மாட்டிலக்கணத்ததாய பொருள்கோள் தட்டுத்தடையின்றி, இவ்வுரைக்கேற்ப ஆண்டாண்டு மிக இலேசாகக் கூட்டியுரைக்கப்படுகின்றது. இவ்வுரைகள் இக்காலமாணவர்களும், ஏனோரும் சைவசித்தாந்த நூற்களை இலேசினின் ஓதியுணர்தற்குப் பயன் தருமென்று நம்புகிறோம். சமயஞான சம்பந்தமான முயற்சிகள் ஒன்றும் நமதன்றெனநினைந்து வாழ்வெனுமையவுட்டாழ்ந்து இடக்குமிககாலத்துச் செல்வர் சிலர்போலாது, இவ்வுரைகளை யச்சிடுவித்தற்காம் பொருளுமுதவி, இத்துறையில் இன்னுமிவர் இதுபோன்ற நற்பணிகள்பல ஆற்றிடுமாறு ஊக்கமூங்காட்டி, இவ்வுரைகள் வெளிவருதற்கண் அவாமிக்குடையராயிருக்கும் பொன்னேரி ராமசாமி நாடாரவர்களின் புதல்வர் சுப்பிரமணிய நாடாரவர்களது சைவ பரிபாலனத்தின்பாற்பட்ட நன்மனம் பெரிதும்போற்றற் குரியதாம். நாடாரவர்கள் செந்தமிழ்ப் பரமாசாரியனாக விளங்கும் செவ்வேள் திருவடித்தாமரைகட்கன்பு மிக்குடையராய் அப்பெருமானது திருவிழாப் பொலிவுகண்டார்தலாதிய சிவபுண்ணியத் திருப்பணிகளில் ஈடுபட்டவரென்பது கேட்டு மகிழ்கின்றேம். ஓராவிற் கிருகோடு தோற்றினாற்போலுமிவர்கள் இத்தகைய திருப்பணிகள் இன்னும் பல வியற்றி இனிது வாழ்ந்திடுமாறு இறைவனது குஞ்சித சேவடியைச் சிந்திப்போமாக.

"ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே."

——:o:——

# பதிப்புரை.

---

ஒரு சமயத்தின் கௌரவத்தை மற்றச் சமயி மதியாதிருப்பது இயல்பு. ஆனால் சைவசமயத்தின் கௌரவத்தை மட்டும் சைவமக்களே மதிப்பதில்லை. உலகத்தில் ஏழெனக் கணக்கிடப்பட்டுள்ள அதிசயங்களை யெல்லாம் அடக்கிக்கொண்டு எட்டாவதாக விளங்கத்தக்க அதிசயம் இதைத்தவிர வேறென்னுளது? இந்த நிலையில், சைவ சித்தாந்த உண்மைகளை விவகார ரீதியாக விளக்குகின்ற சாத்திரத் தொகுதியிலுள்ள இப் போற்றிப் பஃறொடைக்கும், வினாவெண்பாவுக்கும் நான் உரையெழுதியுள்ளேன். ஆண்டாண்டுக் காணப்படும் சைவபண்டிதர்கள் சைவசமுதாயத்தை நோக்கி 'ஐயோ!' வெனப் பரிதபிக்கின்றார்கள். காலகதியை யுத்தேசித்துச் சாமானியக் கல்விமான்கட்கும் விளங்குமாறு எழுதப்பட்டுள்ள எனது உரை அச்சிரியோருக்குப் பெருமகிழ்வையே யுண்டுபண்ணுமென்பது எனது நம்பிக்கை. ஆகையால் அவர்கள் அம்மகிழ்ச்சியின் மிகுதியால் என்னுரையில் ஏதேனும் பிழையுளதாயின் அதனைப் பொருட்படுத்தவே மாட்டார்கள் என்ற தைரியத்தோடு நான் இதனை வெளியிடலானேன்.

இவ்வுரையைச் செங்கற்பட்டுச் சில்லா பொன்னேரி ஸ்ரீமாந்: ரா. சுப்பிரமணிய நாடாரவர்கள் பணவுதவி செய்து அச்சிட்டார்கள். சைவசமயத்துச் செல்வர்கள் சிவதருமத்தை இன்னகாலத்தில் இன்னவாறுதான் செய்தல்வேண்டுமென்பதை இவர்கள் நனகறிந்தவர்கள். சைவசித்தாந்த சாத்திரங்களின் வெளியீட்டில் இவர்களுக்குப்போன்று இன்னுஞ் சிலர்க்குமட்டுமேனும் சிரத்தையிருந்துவிட்டால் சைவசமயம் விரைவிற் பிரகாசித்துவிடுமே. அத்தகையகாலம் விரைவில் வருவதாக. ஸ்ரீமாந்: நாடாரவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். சைவவுலகமும் அந்நன்றியைப் போற்றுக. இவர்கள் நோயற்ற வாழ்வும், குறைவற்றசெல்வமும் எய்தித் தமது சிந்தையை இவ்வாறாய சிவதருமதநிற் செலுத்தத் திருவருள் சுரக்குமாறு ஸ்ரீ ஆனந்தவல்லியம்பா சமேத ஸ்ரீ அகத்தீசுரப்பெருமானது திருவடிக்கமலங்களை யிறைஞ்சுகின்றேன்.

பொன்னேரி,
12-4-28.

ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

—:o:—

# போற்றிப் பஃறொடை.

## பதவுரை.

### சிவபிரானது சொரூப தடத்த நிலைகள்.

—:o:—

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப — னாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கஞ்செய் விந்துவுட
னாதநா தாந்த நடுவேதம் — போதத்தா
லாமளவுந் தேட வளவிறந்த வப்பாலைச்
சேம வொளியெவருந் தேறும்வகை — மாமணிசூழ்
மன்று ணிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி.

பூ மன்னும் — தாமரைப் பூவில் இருக்கின்ற
நான்முகத்தோன் — நான்கு முகங்களையுடைய பிரமனும்
புத்தேளிர் — தேவர்களும்
ஆங்கவர்கோன் — அத்தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனும்
மா மன்னு — இலக்குமி தேவி பொருந்திய
சோதிமணி — ஒளியுள்ள கௌத்துவ மணியை அணிந்த
மார்பன் — மார்பையுடைய விஷ்ணுவும்
நா மன்னும் — (அறிஞரது) நாக்கிலே விளங்குகின்ற
வேதம் — நான்கு வேதங்களும்
வேத அந்தம் — அவ்வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும்
விளக்கம் செய் — (அறிவை) விளக்குகின்ற
விந்துவுடன் — விந்து தத்துவமும்
நாதம் — நாத தத்துவமும்

நாத அந்தம் — அந்நாத தத்துவத்தின் முடிவாகிய குடிலையும்
('நடுவேதம்' என்பதைத் தம் நடுவே என மாறுக)
தம் நடுவே — தம் தம் இதயத்தில் (தோன்றிய)
போதத்தால் — அறிவால்
ஆம் அளவும் தேட — இயன்றமட்டுங் காணுவதற்கு முயல
அளவு இறந்த அப்பாலை — (அந்தப்பசுஞானத்தின்) எல்லையைக் கடந்து அப்பால் நிற்கின்ற
சேமம் ஒளி — பேரின்ப வொளியாகிய சிவபிரான்
('எவருந்தேறும் வகை, மாமணிசூழ் மன்றுணிறைந்து பிறவி வழக்கறுக்க' என்பதை பிறவி வழக்கறுக்க மாமணிசூழ் மன்றுள் எவருந் தேறும்வகை நிறைந்து என மாறுக)
பிறவி வழக்கு அறுக்க — (ஆன்மாக்களது) பிறவித் தொடர்பை அறுத்தெறியும் பொருட்டு
மா மணிசூழ் — மிகுந்த இரத்தினங்கள் சூழ்ந்த
மன்றுள் — திருச்சிற்றம்பலம் என்னும் சிதம்பரத்துள்
எவரும் தேறும் வகை — (தன்னை) எல்லா ஆன்மாக்களுந் தெளிந்து தரிசிக்குமாறு (உருவத்திருமேனி தாங்கி)
நிறைந்து நின்ற — (தனது பேரின்ப வொளி) எங்கும் பெருகி எழுந்தருளியிருக்கின்ற
நிருத்த நிலை — ஆனந்தத்தாண்டவ நிலை
போற்றி — அடியேனைக் காத்தருள்க.
ஆங்கவர் கோன் என்பதில் ஆங்கு அசை.

பிரமன், தேவர், இந்திரன், விஷ்ணு, வேதங்கள், உபநிடதங்கள், விந்து, நாதம், குடிலை யென்னும் இவர்களது அறிவைக்கடந்தவர் சிவபிரான். இது அவரது சொருப நிலை. ஆனால் அவர் ஆன்மாக்களது சநந மரண துக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு எல்லாருங் காணும்படி ஸ்ரீ நடராஜப் பெருமானுய்த் திருமேனி தாங்கிச் சிதம்பரத்துக் கனக சபையிலே விளங்குகின்றவர். இது அவரது தடத்த நிலை.

———:O:———

## சிவபிரானது ஐந்து கிருத்தியங்களும் அநாதி.

— குன்றுத

பல்லுயிர்வெவ் வேறு படைத்து மவைகாத்து
மெல்லை யினைப்பொழிய விட்டுவைத்துந்--தொல்லையுறு

மந்த மடி நடுவென் றெண்ண வளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி.

ஒன்றாத — (இதுவரை முத்தியடைந்த ஆன்மாக்கள் பலவாயினும்) எண்ணிக்கையிற் குறைவு படாதனவும்
பல் உயிர்—பல வேறு தன்மைகளை யுடையனவும் (ஆகிய) ஆன்மாக்களை
வெவ்வேறு — நால்வகைத் தோற்றத்திலும்
படைத்தும் — சிருட்டித்தும்
அவை காத்தும் — அவைகளைக் காத்தும்

('எல்லை யிளைப்பொழிய' என்பதை இளைப்பொழிய வெல்லை என மாறுக.

இளைப்பு ஒழிய — (அளவில்லாத பிறப்பு இறப்புக்களால் அவைகளுக்கு நேர்ந்த) இளைப்பு நீங்கும்படி
எல்லை — (சங்காரகாலமாகிய) முடிவில்
இட்டு — (அவைகளைக் காரணகேவலாவத்தையில்) ஒடுக்கி
வைத்தும் — சங்கரித்தும் (வருதலாகிய)

('தொலலையுறு மந்த மடி நடு வென்று' என்பதை அடி நடு அந்தம் தொல்லை யுறு மென்று என மாறுக.)

அடி நடு அந்தம் — சிருட்டி, திதி, சங்காரம் என்னுங் கிருத்தியங்கள்
தொல்லை உறும் என்று — அநாதித் தன்மையைப் பொருந்து மென்று
எண்ண — (அறிஞர்) கருதும்படி
அளவு இறந்து வந்த — கணக்கில்லாமல் நிகழுகின்ற
பெரிய வழி — அநாதி கிருத்திய முறை
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

நால்வகைத் தோற்றங்கள் :—சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பீஜம்

காரண கேவலாவத்தை :—சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் அசுத்த மாயா காரணத்திலே யொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவத்தாலே மறைப்புண்டு ஒன்று மறியாமற் கிடக்கும் நிலை.

சிருட்டி திதி சங்காரங்கள் பலகால் நடந்துள்ளன. ஆனால் இவைகள் முதலாவது இன்ன காலத்திற்றான் தொடக்க முற்றன வென்பது நமக்குத் தெரியாது. ஆகையால் இக்கிருத்தியங்கள் ஆதியாயினும் தொடக்கம் ஒருவர்க்குந் தெரியவாராமையால் அநாதியெனப்படும். இவ்வநாதிக்குப் பிர

வாக அநாதி யென்று பெயர். மற்றொன்று சொரூப அநாதி யென்பது பதி பசு பாசங்கள் இவ்வநாதியாகும் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து கிருத்தியங்களுள் திரோபவம் திதியினுள்ளும், அநுக்கிரகம் சங்காரத்தினுள்ளும் அடங்கும்.

:0:

## சிவபிரான் உலகத்தைச் சிருட்டித்தல் ஆன்மாக்களின் பொருட்டே.

—மூத்துற்ற

நெல்லுக் குமிதவிடு நீடுசெம்பிற் காளிதமுந்
தொல்லைக் கடறோன்றத் தோன்றுவரு—மெல்லா
மொருபுடை யொப்பாய்த்தா னுள்ளவா றுண்டா
யருவமா யெவ்வுயிரு மார்த்தே—யுருவுடைய
மாமணியை யுள்ளடக்கு மாநாகம் வன்னிதனைத்
தானடக்குங் காட்டத் தகுதியுப்போன்—ஞானத்தின்
கண்ணை மறைத்த கடியதொழி லாணவத்தா
லெண்ணுஞ் செயன்மாண்ட வெவ்வுயிர்க்கு—முண்ணாடி
கட்புலனாற் காணார்தங் கைக்கொடுத்த கோலேபோற்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்—முற்பாற்
றனுகரண மும்புவன முந்தந்த வற்றான்
மனமுதலாய் வந்தவிகா ரத்தால்—வினையிரண்டுங்
காட்டி யதனாற் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி.

மூத்து உற்ற நெல்லுக்கு — முன் உண்டான நெல்லில்
உமி தவிடும் — உமி தவிடு முதலியவைகளும்
நீடு செம்பில் காளிதமும் — ஒளி மிக்க செம்பிற் களிம்பும்
தொல்லை கடல் தோன்ற — பழமையாகிய கடல் வியாபித்து நிற்ப
தோன்று உவரும் — அக்கடல் நீரில் தோன்றியிருக்கின்ற உப்பும்
எல்லாம் — (என்னும்) இவை யனைத்தையும்
ஒரு புடை ஒப்பு ஆய் — (தனக்கு) ஒருபுடை உவமைகளாகக் கொண்டதாய்
தான் உள்ளவாறு — சிவம் அழியாதது போல
உண்டாய் — (தானும்) அழியாமல் நித்தமாய்

அருவமாய் — அருவப்பொருளாய்
எவ்வுயிரும் — எல்லா ஆன்மாக்களையும்
ஆர்த்து (ஏ) — பந்தித்து
( 'உருவுடைய மாமணியை யுள்ளடக்கு மாநாகம்' என்பதை மாநாகம் உருவுடைய மாமணியை யுள்ளடக்கும் என மாறுக )
மா நாகம் — பெரிய பாம்பு
உரு உடைய — ஒளியை யுடைய
மா மணியை — விலையுயர்ந்த மாணிக்கத்தை
உள் அடக்கும் (தகுதியும்) — (தனது நஞ்சுவாய்க்குள்ளே) அடக்கி வைத்திருக்குந் தன்மையையும்
( 'வன்னிதனைத்தானடக்குங் காட்டம்' என்பதை காட்டம் வன்னிதனைத் தானடக்கும் என மாறுக. )
காட்டம் — விறகு
வன்னிதனை — அக்கினியை
தான் அடக்கும் தகுதியும் போல் — தனக்குள்ளே யடக்கிவைத்திருக்குந் தன்மையையும் போல
ஞானத்தின் கண்ணை மறைத்த — (ஆன்மாவினது) ஞானக்கண்ணை (தனக்குள் அடக்கி) மறைத்த
கடிய தொழில் ஆணவத்தால் — கொடுந்தொழிலையுடைய ஆணவமலத்தால்
எண்ணும் செயல் (உம்) மாண்ட — அறிவும் செயலும் ஒழிந்த
எவ்வுயிர்க்கும் — எல்லாவுயிர்களுக்கும்
உள் நாடி — (அவைகளது) இச்சையை யறிந்து பார்த்து
கண் புலனால் காணார்தம் கை — கண்ணாற் காணமாட்டாத பிறவிக்குருடரது கையில்
கொடுத்த கோலே போல் —(கண்போன்று உதவுமாறு) கொடுக்கப்படும் ஊன்று கோலைப்போல
பொற்பு உடைய — விசித்திரம் நிறைந்த
மாயைப்புணர்ப்பின்கண் — மாயாமலத்தைக் கூட்டுமுகத்தால்
முற்பால் தந்து — முதலாவது சூக்குமதேகத்தையும்
கரணமும் புவனமும் தந்து — (பின்னர்த்தூலமான) (தனு) கரண புவன (போக) ங்களையுங் கொடுத்து
அவற்றால் — (ஆணவ முனைப்பாகிய) அகங்காரமமகாரங்களால்
மனம் முதலாய் — மனங்காரணமாய்

வந்த விகாரத்தால்— நிகழும் (நன்மை தீமை என்னும்) வேறுபாட்டால்
வினை இரண்டும்— (நல்வினை தீவினை யென்னும்) இரண்டு வினைகளையும்
காட்டி — (அவைகள் செய்யும்படி) உடனிருந்து
('அதனால் பிறப்பாக்கிக் கைக்கொண்டு' என்பதை கைக்கொண்டு அதனால் பிறப்பாக்கி என மாறுக.)
கைக்கொண்டு — (அவ்வினைகள் அழியாமல் மாயையில் தங்கும்படி) ஏற்றுக்கொண்டு
அதனால் — அவ்வினை காரணமாக
பிறப்பு ஆக்கி — ஏற்ற பிறப்புக்களைக் கொடுத்து
மீட்டு அறிவு காட்டும் — (திரும்பவும் அவ்வினைப்பயன்களை நுகரும்படி தத்துவக் கூட்டங்களோடு கூடிய) ஞானத்தைக்கொடுக்கின்ற
வினை – சிவச்செயல்
போற்றி – அடியேனைக் காத்தருள்க.

ஆன்மாவுக்கு ஆணவபந்தம் அநாதி யென்பதை நெல் தோன்றிய காலத்தில் உமி தவிடு முதலியனவும் முற்பிற்பாடின்றி உடன் தோன்றி யுள்ளன வென்னும் உவமை விளக்கியது.

ஆன்மாவின் அறிவை ஆணவம் மறைக்கும் என்பதைச் செம்பின் ஒளியைக் களிம்பு மறைக்கின்றது என்னும் உவமை விளக்கியது.

சிவ வியாபகத்துள் ஆன்மா இருப்பினும் அவ்வான்மாவைமட்டும் ஆணவம் பந்தித்துள்ளது என்பதைக் கடல்வியாபகத்துள் நீர் இருப்பினும் அந்நீரை மட்டும உப்புக்கலந்து கெடுக்கின்றது என்னும் உவமை விளக்கியது. கடல் என்பது தண்ணீர் தங்க இடந்தந்து நிற்கும் ஆகாயம்.

ஆணவம் அருவமாய்ச் சிவத்தைப்போல் அழியாத பொருளா யிருப்பது. பாம்பு தன்னுள் மாணிக்கத்தை மறைத்துக்கொண்டிருப்பதுபோலவும், மரக்கட்டை தன்னுள் தீயை மறைத்துக்கொண்டிருப்பது போலவும் ஆணவம் தன்னுள் ஆன்ம அறிவை மறைத்துக்கொண்டிருக்கும். இப்பந்தமெய்திய ஆன்மாக்களது இச்சையை யறிந்து அந்த இச்சைக்குத் தக்கபடி சிவபிரான் அவைகட்கு மாயையிலிருந்து தனுகரண புவன போகங்களைக்கொடுத்து அறிவைக் கொஞ்சம் விளக்குவார். குருடன் கோலின் துணையால் இயங்குவதுபோல் ஆன்மாக்களும் அம்மாயா காரியங்களின் துணையால் வினைகளைச் சம்பாதிக்கும். அவ்வினைப்பயன்களை யனுபவித்தல் காரணமாக ஆன்மாக்களுக்கு இறைவன் திரும்பத்திரும்பப் பிறப்புக்களைக் கொடுப்பான்.

———:o:———

## சிவபிரான் ஆன்மாக்களுக்குக் கருவில் உபகரிக்கும் முறைமை.

—நாட்டுகின்ற

வெப்பிறப்பு முற்செ யிருவினையா னிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய்ப் போகத்துட்— கர்ப்பமாய்ப்
புல்லிற் பனிபோற் புகுந்திவலைக் குட்படுங்கா
லெல்லைப் படாவுதரத் தீண்டியதீப் — பல்வகையா
லங்கே கிடந்த வநாதியுயிர் தம்பசியா
லெங்கேனு மாக வெடுக்குமென — வெங்கும்பிக்
காயக் கருக்குழியிற் காத்திருந்துங் காமியத்துக்
கேயக்கை கான்முதலா யெவ்வுறுப்பு — மாசறவே
செய்துதிருத் திப்பின் பியோகிருத்தி முன்புக்க
வையவழி யேகொண் டணைகின்ற — பொய்யாத
வல்லபமே போற்றி.

நாட்டுகின்ற — (உளவென்று ஆகமங்களிற்) சொல்லப்படுகின்ற
எப்பிறப்பும் — (பலவகைப்பிறப்புக்களுள்) எந்தப்பிறப்பையும்
முன்செய் — முன் சநநங்களிற் செய்யப்பட்ட
இருவினையால் — புண்ணிய பாவங்கட்குத் தக்கபடி
நிச்சயித்து — (ஆன்மாக்களுக்கு) கொடுக்கத் தீர்மானித்து

(அவைகளுட் சிறந்த மனிதப்பிறவியைத்தரும் விதம்.)

பொற்பு உடைய — அழகை யுடைய
தந்தை தாய் — தந்தையுந் தாயுஞ் செய்கின்ற
போகத்துள் — சிற்றின்பப் புணர்ச்சியில்
கர்ப்பம் ஆய் — கர்ப்பமாய்ப் பரிணமித்தற் குரியதாய்
புல்லில் பனிபோல்—புல் நுனியிற் காணப்படும் பனித்துளியின் அளவாக
புகும் — (தாயினது கருக்குழியில் ஓர் உயிரோடு) பாய்கின்ற
இவலைக்கு — (தகப்பனது) சிறிது சுக்கிலத்தை
உள் படுங்கால் — (அது அவளது) கருப்பையில் (சுரோணிதத்தோடு கலந்து கருவாக) இருக்கும் போது

('எல்லைப் படா வுதரத் தீண்டிய தீ' என்பதை உதரத் தீண்டிய எல்லைப்படாத்தீ என மாறுக.)

உதரத்து ஈண்டிய — வயிற்றிலே நெருங்கிய
எல்லைப்படாத் தீ — அளவுபடாத உதராக்கினியும்
பல் வகையால் — பல வகைப்பட்டு
அங்கே கிடந்த — அவ்வயிற்றிலே பெருகிக் கிடந்த
அநாதி உயிர் — எண்ணிறந்த புழுக்களும்
தம் பசியால் — (முறையே) தமது வெப்பத்தாலும் பசியாலும்
எங்கேனும் ஆக — எப்படியாவது
எடுக்கும் என — எரித்தாயினும் தின்றாயினும் தொலைத்துவிடுமென்று இரங்கி
வெம் கும்பி — கொடிய கும்பி பாகம் என்னும் நரகத்தை யொத்த
காயம் கருக்குழியில் — அருவருப்பான கருப்பையில்
காத்திருந்தும் — அவ்வுயிர்க்குத் துணையாய்க் காவலிருந்தும்
காமியத்துக்கு ஏய — (பின்னர் அவ்வுயிரின்) கருமத்துக்குத்தக்கபடி
கை கால் முதலா எவ்வுறுப்பும் — கை கால் முதலிய எல்லா வுறுப்புக்களையும்
ஆசு அற (ஏ) — குற்றம் நீங்கும்படி
செய்து திருத்தி — அமைத்து அழகு படுத்தி
பின்பு யோகு இருத்தி — பின்னர் (அவ்வுடம்பை) யோக நிலையில் எடுத்து நிறுத்தி
முன் புக்க — முதலாவது ( அக்கருப்பையிற் ) புகுந்த
ஐய வழியே — (இச்சிறிய வழியாக இப்பெரிய உடம்பு எப்படி வெளி வருதல் கூடும், என்று.) சந்தேகிக்கத்தக்க (சிறிய யோனி வழியைப் பெரிதாக்கி அந்த) வழியாக
கொண்டு அணைகின்ற — (வெளியே கெடாமல்) இழுத்துக்கொண்டு வருகின்ற
பொய்யாத வல்லபம் (ஏ) — கெடாத சிவ சத்தி
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

தாயின் கருப்பத்துட் சென்ற உயிர்க்குப் பத்து மாசங்களிலும் நேரும் பல ஆபத்துக்களும் அவ்வுயிரை அழித்துவிடாதபடி அதற்குக் காவலிருந்தும், உறுப்புகளையெல்லாம் செவ்வையாக ஆக்கிக் கொடுத்தும், பத்தாமாசக் கடைசியில் அதனைப் பங்கமுறாதபடி வெளிப்படுத்தியும் வருகின்ற கருணைக் கடலாகிய சிவபிரானது அபார சத்தி இங்கு வியக்கற்பாலது.

## சிவபிரான் ஆன்மாக்களுக்குக் குழவிப்பருவத்தில் உபகரிக்கும் முறைமை.

அம் மாயக்கா ருண்மறைப்ப
நல்ல வறிவொழிந்து நன்கு தீ — தெல்லையுறு
வக்காலந் தன்னிற் பசியை யறி வித்தழுவித்
தட்காவி சோரத்தா யுண்ணடுங்கி — மிக்கோங்கு
சிந்தை யுருக முலையுருகுந் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் — பந்தித்த
பாசப் பெருங்கயிற்றாற் பல்லுயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறிபோற்றி.

அம் மாயம் கால்தான் மறைப்ப — (குழந்தை பிறந்தவுடனே அதன் ஞானத்தைப்) பிரபஞ்சமயக்கமாகிய சூறாவளி மறைத்தலால்
நல்ல அறிவு ஒழிந்து — (பிறப்பை யொழித்துவிடல் வேண்டுமென்று கருப்பையில் யோக நிலையிலிருக்கும்போது உண்டாயிருந்த) அதன் நல்ல ஞானம் நீங்கி
நன்கு தீது எல்லை உறா — நன்மை யிது தீமை யிது என்னும் பகுத்தறிவைப் பொருந்தாத
அக்காலந்தன்னில் — அக்குழவிப் பருவத்தில்
பசியை அறிவித்து — (அதற்குப்) பசி தெரியும்படி செய்து
அழுவித்து — (அதனை) அழப்பண்ணி
('உட்காவி சோரத்தாயுண்ணடுங்கி' என்பதை தாய் உட்காவி சோரவுண்ணடுங்கி என மாறுக.)
தாய் — (அவ்வழுகையைக் கண்ட) தாய்
உட்கு — பயந்து
ஆவிசோர — (தனது) உயிர் தளரும்படி
உள் நடுங்கி — மன நடுக்க மெய்தி
மிக்கு ஓங்கு — (அன்பு) மிகுந்து வளரப்பெற்ற
சிந்தை உருக — மனம் இரங்குவதால்
முலை உருகும் — தன் முலையினிடத்துச் சுரக்கின்ற
தீம் சுவைப்பால் — இனிய சுவையையுடைய பாலை
வந்து மடுப்ப — அக்குழவி வாய் வைத்துக்குடிப்பதை

கண்டு வாழ்ந்திருப்ப — (அவள்) பார்த்து மகிழ்ச்சியோடிருக்கும்படி
பந்தித்த — தாயைப் பிள்ளையோடு சேர்த்துக் கட்டிய
பாசம் பெருங் கயிற்றால் — பிள்ளை யாசை யென்னும் வலிய கயிற்றினால்
பல் உயிரும் பாலிக்க — எல்லாவுயிர்களையும் வளர்க்கும் பொருட்டு
நேசத்தை வைத்த — தனது ஜீவகாருண்யத்தை அவைகளிடம் பதித்த
நெறி — (சிவபிரானது) வளர்ப்பு முறை
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

'தாய் கருவில் வாழ்குழவி தாமெல்லாம் வேண்டுவது
தூயபிற வாமையொன்றே சோமேசா' — என்பது சிவஞான சுவாமிகள் திருவாக்கு.

பிறப்பை யொழிக்கவேண்டு மென்னும் ஞானம் கருப்பையிலிருக்கின்ற ஆன்மாவுக்கு உண்டு. குழந்தை பிறந்ததும் அந்த ஞானம் ஒழியும். அதனை யொழிப்பது பிரபஞ்ச மாயை. ஆகையால் பிறந்தவுடன் குழந்தைக்குப் பகுத்தறிவில்லை. சிவபிரான் அதற்குப் பசியைமட்டுங் காட்டி அதனை அழச்செய்வார். தாய் ஐயோவென்று மனமிரங்கினதும் அந்த அன்பு காரணமாக அவள் தனங்களிற் பால் சுரக்கும். உடனே அவள் பிள்ளைக்குப் பாலைச் சுவைக்கக் கொடுத்து மகிழ்வாள், இங்ஙனம் தாயக்குக் குழவியின் வளர்ச்சியிலே கண்ணுங் கருத்துஞ் செல்லுதற் பொருட்டும், அதன் பராமரிப்பிற் பராமுகம் ஏற்பட்டு விடாமைப்பொருட்டும் சிவபிரான் அவளிடம் பிள்ளையாசையை யுண்டாக்கி விடுவார். இங்ஙனமெல்லாம் வளர்ப்பது தாயே யாயினும், உண்மையில் அத்தாயின் வழியாகச் சிவபிரானே அக்குழவியைப் பரிபாலிப்பவராவார்.

—:o:—

## சிவபிரான் ஆன்மாக்களுக்குச் சகலத்தில் அறிவை யெழுப்புதல்.

— ஆசற்ற

பாலைப் பசுப்பதத்தும் பாலனு யப்பதத்து
நாளுக்கு நாட்சகல ஞானத்து — மூள்வித்துக்
கொண்டாள வாளக் கருவிகொடுத் தொக்கநின்று
பண்டாரி யான படிபோற்றி.

ஆசு அற்ற — குற்ற மில்லாத

பாளைப் பசும் பதத்தும் — கருப்பையிலிருக்குங் காலமாகிய மிக்க சிறு பருவத்திலும்

பாலன் ஆம் அப்பதத்தும் — (அதனைவிட்டு வெளிவந்த பிறகுள்ள) குழவிப் பருவத்திலும் (உபகரிப்பதோடமையாமல்)

நாளுக்கு நாள் — (குமார விருத்தங்களாகிய) ஏனைய பருவங்களிலும் (உபகரித்து)

('சகல ஞானத்து மூள்வித்துக் கொண்டாள' என்பதை சகல மூள்வித்து ஞானத்துக்கொண்டாள என மாறுக.)

சகலம் மூள்வித்து — (இப்படி உடம்போடு கூடியிருத்தலாகிய) சகலாவத்தையில் (உயிரை) நிறுத்தி

ஞானத்துக்கொண்டு ஆள — (அதனைக்) கலாதி ஞானத்திலே வைத்தாளும் பொருட்டு

ஆள — (அவ்வுயிர் அறிவதற்கு) உபயோகப்படுத்த

கருவி கொடுத்து—முப்பத்தாறு தத்துவங்களையும் (அதற்குக்) கொடுத்து

ஒக்க நின்று — (அதனோடு தானும்) உடனாய் நின்று

பண்டாரி ஆன — (அதற்குச் சேவகனாயமைந்த

படி — (சிவபிரானது) கிருபை

போற்றி — (அடியேனைக்) காத்தருள்க.

சகலாவத்தை :— ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களோடுங் கூடிச் சீவிக்கும் நிலை.

கலாதிஞானம்— அங்ஙனஞ் சகலாவத்தை யெய்திய உயிரானது கலை முதலிய தத்துவக் கூட்டங்களினது துணைகொண்டு அறிதல்.

சிவபிரான் கருவிகளைக் கொடுப்பதோடமையாமல் தானும் உடனாக இருந்து அறிந்து உயிரறிவை யெழுப்புகின்றார்.

—o—

## சிவபிரான் ஆன்மாக்களுக்கு ஐந்து அவத்தைகளிலும் உபகரிக்கும் முறைமை.

தண்டாத —

புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையி
லன்புசேர் கின்றனகட் டைந்தாக்கி — முன்புள்ள
உண்மை நிலைமை யொருகா லகலாது
திண்மை மலத்தாற் சிறையாக்கிக் — கண்மறைத்து

மூலவருங் கட்டி லுயிர் மூடமா யுட்கிடப்பக்
கால நியதி யதுகாட்டி — மேலோங்கு
முந்திவியன் கட்டி லுயிர் சேர்த்துக் கலைவித்தை
யந்த வராக மவைமூன்பு — தந்த
தொழிலறி விச்சை துணையாக மாணி
னெழி லுடைய முக்குணமு மெய்தி — மருளொடு
மன்னு மிதயத்திற் சித்தத்தாற் கண்டபொரு
ளின்ன பொருளென் றியம்பவொண்ணா — வந்நிலைபோய்க்
கண்டவியன் கட்டிற் கருவிகளை ந்தொழியக்
கொண்டுசிய மித்தற்றை நாட்கொடுப்பப் — பண்டை
யிருவினையான் முன்புள்ள வின்பத்துன் பங்கண்
மருவும்வகை யங்கே மருவி — யுருவுடனின்
றோங்கு நுதலாய வோலக்க மண்டபத்திற்
போங்கருவி யெல்லாம் புகுந்திண்டி — நீங்காத
முன்னை மலத்தினிருண் மூடா வகையகத்துட்
டுன்னுயிரு ணீக்குஞ் சுடரேபோ — லந்நிலையே
சூக்கஞ் சுடருருவிற் பெய்து தொழிற்குரிய
ராக்கிப் பணித்த வறம்போற்றி.

('முன்புள்ள உண்மை நிலைமை யொருகாலகலாது' என்பதற்கு முதலாவது பொருள் கூறப்படுகின்றது.)

முன்பு உள்ள — முதலாவது கிடைத்த
உண்மை நிலைமை — இச் சகல நிலையானது
ஒருகால் அகலாது — (முத்திக்காலத்திற்கிடையில்) சிறிது பொழுதாயினும் (உயிரை விட்டு) நீங்காமலிருந்து
தண்டாத — நீங்காத
புன் புலால் — இழிவான இறைச்சியால்
போர்த்த — மூடப்பட்ட
புழுக்குரம்பை — புழு நிறைந்த உடம்பாகிய
மா மனையில் — பெரிய வீட்டில்
அன்பு — கிருபை காரணமாக
சேர்கின்றன — அமைந்தனவாகிய
கட்டு ஐந்து ஆக்கி — (ஐந்து அவத்தைகளுக்கும்) ஐந்து அறைகளை யுண்டாக்கி

( துரியாதீதம் )

('திண்மை மலத்தாற் சிறையாக்கிக் கண்மறைத்து மூலவருங் கட்டி லுயிர்' என்பதை மூலவருங்கட்டிலுயிர் திண்மை மலத்தாற் சிறை யாக்கிக் கண்மறைத்து என மாறுக.)

மூல அரும் கட்டில் — மூலாதாரமாகிய இரகசிய அறையில்
உயிர் — ஆன்மாவை
திண்மை மலத்தால் — புருடதத்துவமாகிய பும்ஸ்துவ மலத்தோடு
சிறை ஆக்கி — கூட்டிப் பிணிப்புறுத்தி
கண் மறைத்து — (மற்றக்கருவிகளோடு கூடி அதிகமாக விளங்காதபடி அதன்) அறிவைச் சுருக்குவதால்
மூடம்ஆய் — (அவ்வுயிர் மூலப்பிரகிருதியைத் தழுவிக்கொண்டு) தாமத குணமயமாக விருந்து
உள் கிடப்ப — (அவிச்சையை மட்டும் நுகர்ந்து) அந்த அறைக்குள் நிற்ப,

( துரியம் )

('கால நியதியது காட்டி மேலோங்கு முந்திவியன் கட்டில்' என்பதை மேலோங்கு முந்திவியன் கட்டில் கால நியதியதுகாட்டி எனமாறுக)

மேல் ஓங்கும் — அடுத்து விளங்குகின்ற
உந்தி வியன் கட்டில் — நாபித்தானமாகிய பெரிய அறையில்
காலம் நியதியது காட்டி — (முதலவத்தையில் சூக்குமத்தொழிற் பாட்டிற்கு ஏதுவாகிய) காலம் நியதி என்னும் தத்துவங்களை (இவ்வவத்தையில் தூலத் தொழிற் பாட்டிற்கு) ஏதுவாக்கி
உயிர் சேர்த்து — (உயிரின்பால் அப்புருட தத்துவத்தினோடு) உயிர்ப் பாகிய பிராணவாயுவையுங் கூட்டுவதால் (அவ்வுயிர் அப்பிராணவாயுவை விடயித்து நிற்ப)

( சுழுத்தி. )

கலை வித்தை அந்த அராகம் அவை — கலை வித்தை அராகம் என்னுந் தத்துவங்கள்
முன்பு தந்த — முதலாவது முறையே எழுப்பிய
தொழில் அறிவு இச்சை — தொழில் அறிவு இச்சை யென்னும் உயிரின் சத்திகள்
('துணையாக மாணின்' என்பதை மாணின் துணையாக என மாறுக.)

மானின் தலை ஆக — மூலப்பிரகிருதி யென்னுங் காரணத்திலுண்டான
எழில் உடைய — அழகு பொருந்திய
முக்குணமும் எய்தி — சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களையும் மருவுதலால் ( அந்த உயிர் )
மருளோடு மன்னும் — மயக்கத்தோடு பொருந்திய
இதயத்தில் — இருதயமாகிய அறையில்
சித்தத்தால்— ( அவ்விருதத்துவங்களோடு சித்தமும் தொழிற்படுவதால்) அச்சித்ததத்துவங்கொண்டு
கண்ட பொருள் — தூக்கிச் சிந்தித்த விடயமானது
இன்ன பொருள் என்று — இத்தகைய விடயமென்று
இயம்ப வொண்ணு — ( கனவின்கண் அறிந்து ) சொல்லமாட்டாத
அந்நிலை போய் — அந்த அறையை விட்டு

( சொப்பனம். )

கண்ட வியன் கட்டில் — கண்டத்தானமாகிய பெரிய அறையில்
கருவிகள் ஈர் ஐந்து ஒழிய — பத்துக்கருவிகள் நீங்கலாக
கொண்டு — இருபத்தைந்து கருவிகளைக்கூட்டி
( ' நியமித்தற்றை நாட் கொடுப்பப் பண்டையிருவினையால் முன்புள்ள வின்பத்துன்பங்கள் ' என்பதை பண்டை யிருவினையால் முன்புள்ள வின்பத்துன்பங்கள் நியமித்தற்றை நாட்கொடுப்ப எனமாறுக )
பண்டை இருவினையால் — பழைய இருவினைகளின் பயனாக
முன்பு உள்ள — எப்பொழுதும் உள்ள
இன்ப துன்பங்கள் — சுக துக்கங்களை
நியமித்து — நிச்சயித்து
அற்றை நாள் கொடுப்ப — அந்தச் சொப்பன வேளையில் புசிப்பித்தலால்
( ' மருவும் வகை யங்கே மருவி ' என்பதை அங்கே மருவும் வகை மருவி என மாறுக. )
அங்கே — அப்பொழுதே
மருவும் வகை — அப்பயன்களை யனுபவிக்கும் முறையில்
மருவி — ( அவ்வுயிர் ) அனுபவித்து நிற்ப

( சாக்கிரம் )

உருவுடன் நின்று — அழகோடு பொருந்தி
ஓங்கும் — விளங்குகின்ற
நுதலாய — நெற்றித்தானமாகிய

ஓலக்க மண்டபத்தில் — அரசவை போல்வதாகிய அறையில்
போம் கருவி எல்லாம — (சொப்பனத்தில் தொழிற் படாமல்) மடங்கிக்கிடந்த பத்துக்கருவிகளும்
புகுந்து ஈண்டி — அப்பொழுது தொழிற்பட்ட இருபத்தைந்து கருவிகளோடுங் கூடித் தொழிற்பட்டு
நீங்காத — கெடாத
முன்னை மலத்தின் இருள் மூடா வகை — துரியா தீதத்திலுள்ள மும்லது வமலத்தின் மயக்கம் (உயிரைக்) கவராதபடி
அகத்துள் — வீட்டில்
துன்னும் இருள் — நெருங்கிய இருளை
நீக்கும் — விலக்குகின்ற
சுடரேபோல் — விளக்குப் போல
அந்நிலையே — இச்சாக்கிரத்தில்
சூக்கம் — சூக்குமை முதலிய நான்கு வாக்குக்களையும்
சுடர் உருவில் — ஆன்மாவின் அறிவில்
பெய்து — கூட்டி
தொழிற்கு உரியர் ஆக்கி — (ஆன்மாக்களை) வெவ்வேறு தொழிலில் வல்லராகும்படி செய்து
பணித்த — (அவ்வத்தொழில்களிற்) செலுத்துகின்ற
அறம் — (சிவ) தருமம்
போற்றி — (அடியேனைக்) காத்தருள்க.

ஐந்து அவதநைகளிலுந் தொழிற்படுங் கருவிகள் முப்பத்தைந்து. அவை புருடதத்துவம் 1; சத்தாதி 5; வசனாதி 5; வாயுக்கள் 10; அந்தக்கரணம் 4; வாக்காதி 5; மெய்யாதி 5; என்பனவாம்.

சத்தாதி 5 :— ஞானேந்திரியங்களான் அறியப்படும் சத்தம், ஸ்பரிசம் ரூபம், ரசம், கந்தம் என்னுட் ஐந்து விடயங்கள். பஞ்ச பூதங்கட்குக் காரணமான சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளல்ல.

வசனாதி 5 :— வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்தம்.

வாயுக்கள் 10 :— பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

அந்தக் கரணம் 4 :— மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்.

வாக்காதி 5 :— வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

மெய்யாதி 5 :— மெய், வாய், கண், மூக்கு, செவி.

## துரியாதீதம்.

ஆன்மா மூலாதாரத்தில் நிற்கும் நிலை துரியாதீதமாம் இங்கே தொழிற் படுங்கருவி ஒன்று அது புருட தத்துவம். இங்கே ஆன்மாவைப் பொருந்தியிருக்கும் மலம் பும்ஸ்துவ மலம். இம்மலம் பஞ்சக்கிலேசம் எனவும் படும். பஞ்சக்கிலேசங்களாவன அவிச்சை, அங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் ஐந்துமாம். ஆன்மா புருடதத்துவத்தோடுகூடி, அத்தத்துவத்தை விட்டு நீங்காத மூலப் பிரகிருதியைத் தழுவி, பஞ்சக்கிலேசத்துள் அவிச்சையை மட்டும் அநுபவித்துக் கொண்டிருக்கும்.

## துரியம்.

ஆன்மா உந்தித்தானத்தில் நிற்கும் நிலை துரியமாம். இங்கே தொழிற்படுங்கருவி இரண்டு. அவை புருடதத்துவமும் பிராணவாயுவுமாம். ஆன்மா அவைகளோடு பொருந்தி நின்று பிராணவாயுவை விடயித்துக் கொண்டிருக்கும்.

## சுழுத்தி.

ஆன்மா இருதயத்தானத்தில் நிற்கும் நிலை சுழுத்தியாம். இங்கே தொழிற்படுங் கருவி மூன்று. அவை புருடதத்துவமும், பிராணவாயுவும், சித்தமுமாம். யாதானும் ஒரு விடயத்தைத் தாக்கிச் சிந்தித்தல் சித்தத்தின் தொழில். இங்கே இது தொழிற்படுதலால் ஆன்மா இக்கருவியின் துணையால் யாதானுமொரு விடயத்தைத் தாக்கிச் சிந்தித்துக்கொண்டிருக்கும். ஆனால் இங்கே சிந்திக்கப்பட்ட விஷயம் இன்னது என்பதை விழித்திருக்குங்காலமாகிய சாக்கிரத்தில் கண்டுகொள்ளமுடியாது. ஏனெனில் சிந்திக்கப்பட்ட விஷயம் இன்னது என்பதை நிச்சயிப்பது புத்தியாகலானும் அப்புத்தி இச்சுழுத்தியில் தொழிற்படாமையாலும் என்க.

## சொப்பனம்.

ஆன்மா கண்டத்தானத்தில் நிற்கும் நிலை சொப்பனமாம். இங்கே தொழிற்படுங்கருவி இருபத்தைந்து. அவை புருடதத்துவம் ஒன்றும், வாயுக்கள் பத்தும், அந்தக்கரணங்கள் நான்கும், சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்துமாம். ஆன்மா இங்கே வினைப்பயன்களை அவ்விருபத்தைந்து கருவிகளோடுங்கூடி நின்று நுகர்ந்துகொண்டிருக்கும். ஆனால் வினைகளைச் செய்ய அதனால் முடியாது. ஏனெனில் புறவிந்திரியங்களாகிய வாக்காதி ஐந்தும் மெய்யாதி ஐந்தும் இங்குத் தொழிற்படாமையாலென்க.

சாக்கிரம்.

ஆன்மா நெற்றித்தானத்தில் நிற்கும் நிலை சாக்கிரமாம். இங்கே தொழிற்படுங்கருவி முப்பத்தைந்து. அவை புருடதத்துவமுதல் மெய்யாதி ஐந்து முடிய முதலாவது சொல்லப்பட்டுள்ளவைகளாம். ஆன்மா அம்முப்பத்தைந்து கருவிகளோடு பொருந்தி நின்று வினைப்பயன்களை யனுபவிப்பதோடமையாமல் வினைகளைச் செய்துகொண்டுமிருக்கும்.

———:o:———

## சிவபிரான் ஆன்மாக்கள் செய்யும் வினைகளுக்கு உடனாதல்.

———

—வேட்கைமிகு.

முண்டிப் பொருட்டா லொருகா லவியாது
மண்டியெரி யும்பெருந்தீ மாற்றுதற்குத்—திண்டிறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையாற் றொழில்புரிது
லெல்லா முடனே யொருங்கிசைந்து—செல்காலை
முட்டாமற் செய்வினைக்கு முற்செய்வினைக் குஞ்செலவு
பட்டோலை யிட்டும் படிபோற்றி.

('வேட்கை, மிகு முண்டிப் பொருட்டாலொரு காலவியாது மண்டியெரியும் பெருந்தீ மாற்றுதற்கு' என்பதை ஒருகாலவியாது மண்டியெரியும் பெருந்தீமாற்றுதற்கு வேட்கை மிகு முண்டிப்பொருட்டால் என மாறுக.)

ஒரு கால அவியாது — ஒரு பொழுதுங் கெடாமல்
மண்டி எரியும் — மிகுந்து எரிகின்ற
பெருந்தீ — பெரிய உதராக்கினியை
மாற்றுதற்கு — தணிப்பதற்கு
வேட்கை மிகும் — ஆசை மிகுதலால்
உண்டிப்பொருட்டால் — ஆகாரத்தின் நிமித்தமாக
திண் திறல் சேர் — திண்ணிய வலிமை சேர்ந்த
வல்லார்கள் — வல்லவர்கள்
வல்ல வகையால் — தங்கள் தங்கள் வல்லமைக்குத் தக்கபடி

தொழில் புரிதல் — பல வேறு தொழில்களைச் செய்தலாகிய
எல்லாம் — அவர்களது எல்லாச் செயல்களிலும்
உடனே ஒருங்கு இசைந்து—அவர்களோடு (தானும்) உடனாகக் கூடி
நின்று (அவர்கள் அத்தொழில்களைப் புரியும்படி செய்து)
செல்காலை — (அத்தொழில்கள்) நடைபெறுங்காலத்தில்
முட்டாமல் — அவர்களுக்கு இடையறாமல் ஏறுகின்ற
செய்வினைக்கும் — ஆகாமிய வினைக்கும்
முன் செய் வினைக்கும் — சஞ்சித வினைக்கும்
செலவு (க்கும்) — பிராரத்துவ வினைக்கும்
பட்டோலை — கணக்கோலை
திட்டும் — அவ்வப்போது எழுதிவைத்துக்கொள்ளுகின்ற
படி — சிவகிருபை
போற்றி — அடியேனைக் காத்தருள்க

ஆகாமியம் :— புதிதாகச் சம்பாதிக்கும் வினைகள்.

சஞ்சிதம் :— முன்னமேயே சம்பாத்தியம் பண்ணி இருப்புச் சரக்காக உள்ளவை.

பிராரத்தம் :— சஞ்சிதத்திலிருந்து அனுபவத்திற்காக எடுத்துக் கொடுக்கப்படும் பகுதி.

ஆன்மாக்கள் செய்யும் புண்ணியச் செயல்களுக்கு மட்டுமே சிவபிரான் உடனாக இருக்கின்றார் என்பதில்லை. அவைகள் செய்யும் பாவச்செயல்களுக்கும் அவர் உடனாகவே யிருக்கின்றார். 'யான் செய்யுந் துரிசுகளுக்குடனாகி' என்றார்கள் ஸ்ரீமத் சுந்தரமூர்த்திசுவாமிகள். அப்படி அவர் உடனாக இருந்தாலும் அவ்விருவகை வினைகளின் பயன்கள் ஆன்மாக்களுக்கே யுண்டு, சிவபிரானுக்கில்லை. காரணம் அவர் உடனாக விருத்தலை ஆன்மாக்கள் அறியாமல் 'எல்லாம் நாமே செய்கின்றோம்' என்று அவைகள் கொண்டுள்ள மாறுபட்டவுணர்ச்சியேயாம் இத்திரிவுணர்ச்சியில்லையானால் அவைகளுக்கு நல்வினைப்பயனுமில்லை; தீவினைப்பயனுமில்லை. இந்த 'நாம்' என்னும் முனைப்பு சிவபிரான் தந்ததில்லை, ஆணவம் தந்தது. ஆகையால் அவர் அவ்வினைகளுக்குக் கணக்கெழுதி வைக்கின்றார், பயனை ஆன்மாக்களுக்கு ஏறாமற் குறையாமற் கொடுக்கும் பொருட்டு.

———:o:———

## சிவபிரான் ஆன்மாக்களுக்கு வினைப்பயனைக் கொடுக்கும் முறைமை.

— நட்டோர்க்கு,

மிக்கிலைமை மானுடருக் கேயன்றி யெண்ணிலா
மன்னுயிர்க்கு மிந்த வழக்கேபாய் — முன்னுடைய
நாணாள் வரையி னுடல்பிரித்து நல்வினைக்கண்
வாணாளின் மாலா யனாகி — நீணாகர்
வானாடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானு விதத்தா னலம்பெறுநா — டான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட — விற்றைக்கு
மில்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதொ ரின்சொ னடுவாகச் — சொல்லியிவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு — மையறருஞ்
செக்கி லிடைத்திரித்துந் தீவாயி லிட்டெரித்துந்
தக்கநெருப் புத்தூண் டழுவுவித்து — மிக்கோங்கு
நாராசங் காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து
மீபாவுன் னூனைத்தின் னென்றடித்தும் — பேராம
லங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறாத வேட்கையரா — யிங்கொருநா
ளெண்ணிமுதற் காணாத வின்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு — முன்னாடிக்
கண்டு கடன்கழித்தற் காரியமா மென்றெண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் — மண்டெரியிற்
காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணூரிக்க நன்னிதிய
மீத்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் — வாய்த்தநெறி
யோடியதே ரின்கீ ழுயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவமின்றே நீங்குமென — நாடித்தன்
மைந்தனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை நமன்றூதர் — வெஞ்சினத்தா
லல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி.

நட்டு ஒங்கும் — நாட்டப்பட்டு விளங்குகின்ற
இந்நிலைமை — (சிவம் உடலாயினும் பயன் ஆன்மாவுக்கே என்னும்) இச்செய்தி
மானுடருக்கே அன்றி — மனிதப்பிறவியுடையார்க்கு மட்டுமே என்பதல்லாமல்
எண் இலா — கணக்கில்லாத
மன் உயிர்க்கும் — (வேறு பிறவிகளை யெடுத்து) வந்துள்ள (எல்லா) ஆன்மாக்களுக்கும்
இந்த வழக்கே ஆய் — அடியிற்கண்ட முறையிற் பொருந்துவதாகலான்
முன் உடைய — (ஆன்மாவுக்குக்) கருவில் வைத்தே திட்டம் பண்ணப்பட்டுள்ள
நாள் — ஆயுளின்
('நாள் வரையின்' என்பதை வரை நாளின் என மாறுக.)
வரை நாளின் — கடைசி நாளில்
உடல் பிரிந்து — தூல வுடலைப்போக்கி (கொடுக்கப்படும் திவ்விய சரீரத்தை அவ்வான்மா பெற்று)
நல் வினைக்கண் — தனது நல்வினைப்பயன் அநுபவத்தில்
வாழ் நாளில் — வாழ்கின்ற காலத்தில்
மால் ஆய் — விஷ்ணுக்களாகியும்
அயன் ஆகி — பிரமர்களாகியும்
நீள் நாகர் — பெரிய நாகலோக வாசிகளுக்கும்
வான் நாடர் — தேவலோகவாசிகளுக்கும்
கோ முதலாய் — அரசராகிய இந்திரர் முதலியவர்களாகியும்
வந்த பெரும் பதத்து — (முறையே அவரவர்களுக்கென்று) ஏற்பட்ட (வைகுண்டம் முதலிய) பெரிய பதங்களிற் சென்று
நானாவிதத்தால் — பலவகையாக
நலம் பெறும் நாள் — இன்பத்தை யனுபவித்துக்கொண்டிருக்குங் காலத்தில்
தான் மாள — அவ்வின்ப நுகர்ச்சி முடிந்ததும் (தனது தீவினைப்பயனை யனுபவித்தற் பொருட்டு அவ்வான்மாவை)
வெற்றிக் கடுந் தூதர் — வெற்றி பொருந்திய கொடிய யமபடர்கள்
வேகத்துடன் வந்து — விரைவாகச் சென்று
பற்றி — (அத்திவ்விய சரீரத்தைப்போக்கி யாதனா சரீரத்தைக்கொடுத்து) பிடித்திழுத்து

தம் வெம் குருவின்பால் காட்ட — தமது கொடிய எமதருமராசன் முன் கொண்டுவந்து நிறுத்த (அவர் அந்த ஆன்மாவைப் பார்த்து)

('இற்றைக்கு மில்லையோ பாவி பிறவாமை' என்பதை பாவி பிறவாமை இற்றைக்கு மில்லையோ என மாறுக.)

பாவி பிறவாமை — 'அடா, பாவி! நீ பிறவா நெறியை யடையும் பொருட்டு (சிவபிரானது திருவடிப்பத்தியை)

இற்றைக்கும் இல்லையோ — நாளிது வரையும் பெறவில்லையா?'

என்று எடுத்து — என்று தொடங்கி

('நல்லதொரின்சொனடுவாகச் சொல்லி' என்பதை நல்லதொரின் சொல் சொல்லி நடுவாக என மாறுக.)

நல்லதொர் இன் சொல் — நல்ல ஒப்பற்ற இனிய சொற்கள் சில

சொல்லி — மிகவும் இரக்கத்தோடு சொல்லிவிட்டு

நடுவாக — (பின்னர் நீதியைச்செலுத்தும் பொருட்டு) நடுவு நிலைமை கோணாமலிருந்து

('இவர் செய்திக்குத்தக்க செயலுறுத்து வீரென்று வெய்துற்றுரைக்க' என்பதை வெய்துற்று இவர் செய்திக்குத் தக்க செயலுறுத்துவீரென்று உரைக்க என மாறுக)

வெய்துற்று — உடனே கோபித்து

இவர் செய்திக்குத்தக்க — 'இவ்வான்மாவினது தீவினைக்குத்தக்கபடி

செயல் உறுத்துவீர் என்று — தண்டனையைக் கொடுப்பீர்களாக' என்று

உரைக்க — (எமபடர்களுக்குக்) கட்டளையிட

விடை கொண்டு — (அவர்களும் 'அப்படியே செய்கிறோம்' என்று சொல்லித் தருமராசனிடம்) உத்தரவு பெற்றுக்கொண்டு (அவ்வான்மாவை இழுத்துப்போய்)

மையல் தரும் — மயக்கத்தைத் தருகின்ற

செக்கின் இடைதிரித்தும் — செக்கிலிட்டு ஆட்டியும்

தீ வாயில் இட்டு எரித்தும் — அக்கினிக்குழியில் தள்ளி எரித்தும்

தக்க நெருப்புத்தூண் தழுவுவித்தும் — தகுதியான அக்கினித் தம்பத்தைக் கட்டியணைக்கும்படி செய்தும்

மிக்கு ஓங்கு — அளவு மிகுந்திருக்கின்ற

நாராசம் காய்ச்சி — நாராசத்தை யுருக்கி

செவி மடுத்தும் — செவியில் ஊற்றியும்

நா அரிந்தும் — நாக்கை யறுத்தும்

('ஈராவுன்னூனைத்தின் னென்றடித்தும்' என்பதை உன்னூனை ஈரத்தின் னென்றடித்தும் என மாறுக.)

உன் ஊனை — 'உனது உடம்பிலுள்ள மாமிசத்தை

ஈரத்தின் என்று — (நீயே) அறுத்துத்தின்னுக' என்று கூறி

அடித்தும — (உலக்கை முதலியவற்றால்) அடித்தும்

('போராமலங்காழ் நரகத்து' என்பதை அங்காழ் நரகத்து போராமல் என மாறுக.)

அங்கு ஆழ் நரகத்து — அங்குள்ள ஆழமான நரகக் குழியுள்

போராமல் — அதனைவிட்டு விலகாமலிருக்கும்படி

அழுத்துவித்தும் — அமுக்கியும்

பின்னும் — இப்படி யெல்லாஞ் செய்த பின்னருங் கூட

தம் வெம் கோபம் மாறாத — தமது கொடிய கோபம் நீங்க மாட்டாத

வேட்கையர் ஆய் — (அவ்வான்மாவை மேலுந் தண்டிக்கவேண்டு மென்னும்) ஆசை மிகுந்தவராய்

இங்கு ஒரு நாள் — இங்கே யனுபவிப்பது சில நாள் (துன்பந் தானே என்று

எண்ணி — நினைப்பதுண்டாயின் (அங்ஙனம் அளவிடுவதற்கு)

முதல் காணாத — தொடக்கங்காண முடியாத (அதாவது அளவு கடந்த)

இன்னல் — துன்பத்தையுடைய

கடு நரகம் — கொடிய நரகத்தில்

பல் நெடும் நாள் — பல்லூழிகாலமாக

செல்லும் — (அவ்வான்மாவைச்) செலுத்தும்படி

('செல்லும்' என்னுந் தன்வினை செலுத்தும் எனும் பிறவினைப் பொருளில் வந்தது.)

பணி கொண்டு — (தருமராசனையும் எமபடர்களையும்) ஏவி

('பணி கொண்டு' என்பது 'கண்டு நிற்க வல்ல' என்பதனோடு சேர்ந்து சிவன் செயலாதல் காண்க.)

முன் நாடிக் கண்டு — (பெற்றோர் பிள்ளையின் நோயை) முன்னமேயே நன்றாகத் தெரிந்துகொண்டு

('கடன் கழித்தற் காரியமாம்' என்பதை கழித்தற் காரியம் கடனாம் என மாறுக.)

கழித்தற் காரியம் — அந்நோயைப் போக்கிச் சுகப்படுத்தலாகிய வேலை

கடன் ஆம் என்று — தங்களுக்கு உரிய தலையாய கடமையாகுமென்று
எண்ணி — நினைத்து
கொண்டு — (அப்பிள்ளையை) எடுத்துக்கொண்டு (மருத்துவர் வீட்டுக்கு) வர
வருநோயின் குறிப்பு அறிவார் —(அப்பிள்ளைக்கு) நேர்ந்துள்ள நோயின் தன்மையை அறியவல்ல மருத்துவர்
மண்டு எரியில் — கொழுந்து விட்டு எரிகிற அக்கினியில்
காய்ச்சி — இருப்புக்கம்பியைப் பழுக்கக் காயவைத்து
சுட — அந்நோய்க்குத்தக்கபடி சுடவும்
அறுக்க — கத்தியால் அறுக்கவும்
கண் உரிக்க — (அந்நோய் கண்ணிற் படலமாயின்) கண்ணை உரிக்கவும்
('நன்னிதிய மீத்துத்தாய் தந்தை தமரின்புறுதல்' என்பதை தாய் தந்தைதமர் நன்னிதிய மீத்து இன்புறுதல் என மாறுக)
தாய் தந்தை தமர் — (அப்பிள்ளையின) பெற்றோரும் உறவினரும் (அச்செயல்களை நல்லதென்று கண்டு)
நல் நிதியம் — அதிகமான திரவியத்தை
ஈத்து — (சன்மானமாக அம்மருத்துவருக்குக்) கொடுத்து
இன்பு உறுதல் — (பிள்ளை நோய் நீங்கிச் சுகமடைந்ததற்காக) மகிழ்ச்சியை யடைதல்
வாய்த்த நெறி — பொருந்திய தன்மை போல
ஓடிய தேரின் கீழ் — (திருவாரூரில் மனுச்சோழராது மகனார் ஏறிச்செலுத்தச்) சென்றுகொண்டிருந்த தேர்ச்சக்கரத்தின் கீழ் (அகப்பட்டு)
உயிர் போனகன்றால் (ஏ) — மாண்டுபோன பசுவின் கன்று காரணமாக
நீடு பெரும் பாவம் — ஏற்பட்ட கொடும்பாவமானது
இன்றே நீங்கும் என — தமது மகனாருக்கு அப்பொழுதே தொலைந்துவிடுமென்று
நாடி — தீர்மானித்து
தன் மைந்தனையும் ஊர்ந்தோன் — தமது அந்த ஒரே மகனாரையும் அத்தேர்ச் சக்கரத்தின் கீழ்க்கிடத்திச் செலுத்திய மனுச்சோழர் பெருமானது
வழக்கே — நீதியையே
வழக்கு ஆக — (தனது) நீதியாகக்கொண்டு
(இங்ஙனம் கொள்ளுவது சிவபிரான் என்க.)

நஞ்சு அனைய சிந்தை — விஷம்போலும் கொடிய மனசையுடைய
நமன் தூதர் — எமராசனுடைய தூதர்கள்
வெம் சினத்தால் — கொடிய கோபங்கொண்டு
அல்லல் உறுத்தும் — மாபாவிகளை வேதனைப்படுத்துகின்ற
அரு நரகம் — (சாமானியர் பார்த்தாலுஞ் சகிக்கமாட்டாத அவ்வளவு) கொடிய நரக லோகத்தை
கண்டு நிற்கவல்ல — (நீதியோடு) பார்த்துக்கொண்டிருக்க வல்ல
கருணை மறம் — சிவபிரானது மறக்கருணை
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

மறக்கருணையாவது ஆன்மாக்களுக்குத் துன்பம்போற் காணப்பட்டு இன்பம் பயக்குஞ் சிவச்செயலாம். அறக்கருணை பயப்பாட்டில் இன்பமாவதோடு தோற்றத்திலும் இன்பமாயிருக்கும்.

சிவபிரான் ஆன்மாக்களுக்குக் கருமபலனை எல்லாப் பிறவிகளிலுங் கொடுப்பார். ஆனால் பெரும் புண்ணியத்துக்குரிய அதிக இன்பத்தை அனுபவித்தற்கு அவைகள் தேவலோகத்துக்கு அனுப்பப்படும். அங்கே அவ்வனுபவத்தின் பொருட்டு அவைகளுக்குக் கொடுக்கப்படுஞ் சரீரம் திவ்விய சரீரம் என்னும் பெயர் பெறும் இது பூதசார வுடம்பு எனவும் படும். பெரும் பாவத்துக்குரிய அதிக துன்பத்தை அனுபவித்தற்கு அவைகள் நரக லோகத்துக்கு அனுப்பப்படும். அங்கு அவ்வனுபவத்தின் பொருட்டு அவைகளுக்குக் கொடுக்கப்படும் சரீரம் யாதனா சரீரம் என்னும் பெயர் பெறும். இவ்வுலகத்தில் அதிக இன்பமும் அதிக துன்பமும் இல்லாமையானும், இவ்வுலகத்திற் கொடுக்கப்படும் உடம்புகள் அவைகளை அனுபவித்தற்கு யோக்கியமல்லவாகலானும் அந்த லோகங்களும் அந்த உடம்புகளும் வேறு வேண்டப்படுவனவாம்.

எமபடர்கள் ஆன்மாக்களைத் துன்புறுத்துங்கால் சிவபிரான் பார்த்துக்கொண்டிருத்தல் இரக்கமின்மை யாகாதோவெனின் அவ்வேதனை அவைகளுக்குக் கடைசியில் இன்பமாய் முடிதலின் ஆகாதென்க. நரகவேதனையானது மருத்துவன் சுடுதல் முதலியவற்றால் நோயாளிகளைத் துன்பப்படுத்துவது போன்றதே. அன்றியும் நீதி செலுத்தும்போது இரக்கம் அபிமானம் முதலியன காட்டுதல் பெருந்தவறாகும். இவ்வுண்மையை மனுச்சோழரது நடுநிலைதிறம்பா நீதிச்செயலில் வைத்துக் கண்டு கொள்க.

—:0:—

## சிவபிரான் ஆன்மாக்களுக்குச் சத்திநிபாதம் வருவித்தல்.

—பல்லுயிர்க்கு
இன்ன வகையா லிருவினைக்க ணின்றருத்தி
முன்னை முத லென்ன முதலில்லோ — னல்வினைக்க
ணெல்லா வுலகு மெடுப்புண் டெடுப்புண்டு
செல்காலம் பின்னாகஞ் சேராமே — நல்லநெறி
யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுத
லுய்யு நெறிசிறிதே யுண்டாக்கிப் — பையவே
மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநாண்
மொட்டா யுருவா முறைபோலக் — கிட்டியதோர்
நல்ல பிறப்பிற் பிறப்பித்து நாடும்வினை
யெல்லை யிரண்டு மிடையொப்பிற் — பல்பிறவி
யத்தமதி லன்றே வளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்குந் தாம்போற்றி.

('பல்லுயிர்க்கு, இன்னவகையா லிருவினைக்க ணின்றருத்தி முன்னை முதலென்ன முதலில்லோ, னல்வினைக்க ணெல்லா வுலகு மெடுப்புண் டெடுப்புண்டு' என்பதை முன்னை முதலென்ன முதலில்லோ னல்வினைக்க ணெல்லாவுலகுமெடுப்புண் டெடுப்புண்டு இன்னவகையால் பல்லுயிர்க்கு மிருவினைக்கணின்றருத்தி என மாறுக.)

முன்னை முதல் என்ன — முதற் கடவுள் என்று

முதல் இல்லோன் — வேறொருவரையுந் தனக்கு முதல்வனாக இல்லாத சிவபிரான்

நல் வினைக்கண் — (தனது) நல்ல கிருத்தியத்தால்

எல்லா உலகும் — சர்வலோகங்களும்

எடுப்புண்டு எடுப்புண்டு—மாறி மாறிச் சிருட்டிக்கப்பட (அங்கெல்லாஞ் (செலுத்தி

இன்ன வகையால் — முன் கூறப்பட்டபடி

பல் உயிர்க்கும் — எல்லா ஆன்மாக்களுக்கும்

இருவினைக்கண் நின்று — தனது ஆணையை இருவினையின்மாட்டு வைத்து

அருத்தி — அவ்வினைப்பயன்களை நுகர்வித்து

செல் காலம் — இப்படி நிகழுங் காலத்தில்
பின் — கடைசியாக
நரகம் சேராமே — அவ்வான்மாக்கள் நரகமார்க்கத்தில் சேராமல்
நல்ல நெறி எய்துவதோர் காலம் — முத்திமார்க்கத்திற் சேர்வதற்கேற்ற புண்ணியம் வாய்த்த சமயத்தில்
தன் அன்பரைக்கண்டு — தனது மெய்யடியார்களைக்கண்ட விடத்து
இன்பு உறுதல் — (தன்னையே கண்டதாகக்கருதி) மகிழ்ச்சியடைதலாகிய
உய்யும் நெறி — பிழைக்கும் வழியை
சிறிதே உண்டாக்கி — (அவைகளுக்குக்) கொஞ்சங் காட்டி
('பையவே மட்டாய் மலராய்' என்பதை மட்டாய் பையவே மலராய் என மாறுக.)

மட்டு ஆய் — தேன் உண்டாகி
பையவே — கொஞ்சங் கொஞ்சமாய்
மலர் ஆய் வரு நாளின் — மலராக விரியும் பருவத்திற்கு
முன்னை நாள் — முந்திய பருவத்தில்
மொட்டு ஆய் — மொட்டாக இருந்து
உரு ஆம் — வளர்ச்சியடைகின்ற
முறை போல — (பூவின்) தன்மையைப் போல
கிட்டியதோர் நல்ல பிறப்பில் — (கீழ்ப்பிறவிகளிலிருந்து புண்ணியப் பயனாற் படிப்படியாக வுயர்ந்து கடைசியிற்) கிடைக்கத்தகுந்த உயர்ந்த சைவப்பிறப்பில்
பிறப்பித்து — (அவைகளைப்) பிறக்கும்படி செய்து
('நாடும் வினை யெல்லை யிரண்டும்' என்பதை நாடும் இரண்டு வினை யெல்லையும் என மாறுக.)

நாடும் — ஆராயப்பட்ட
இரண்டுவினை எல்லையும் — நல்வினை தீவினை யென்னும் இரண்டின் முடிவும்
இடை ஒப்பில் — தம்முள் ஒத்துப்போனால்
('பல் பிறவியத்த மதிலன்றோ' என்பதை அதிலன்றோ பல்பிறவியத்தம் என மாறுக.)

அதில் அன்றோ! — அவ்விருவினை யொப்பிலல்லவா
பல் பிறவி அத்தம் — (இதுவரையு மெடுத்த) எல்லாப் பிறவிகளின் பயனுங் கிடைப்பதாகும்! ஆகையால்)

அளவு என்று — அவ்விருவினை யொப்பே ஏற்றகால மென்று
பார்த்திருந்து — (அதனை) எதிர்பார்த்திருந்து
சத்தி பதிக்கும் — அந்தச் சமயத்தில் அவ்வான்மாக்களின் மாட்டுத்தனது சத்தியைப் பதியச் செய்கின்ற
நாம் — சிவபிரானது தகுதி
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

இங்ஙனம் சிவபிரான் உலகத்தைப் பலகாலுஞ் சிருட்டித்து ஆன்மாக்களுக்கு வினைப்பயன்களை யூட்டுவார். கடைசியாக அவைகளுக்குப் புண்ணியமிகுதியால் மூத்திநெறியிற் சேரத்தக்க நல்லகாலம் வரும். அப்பொழுது அவர் அவைகளுக்குப் பூர்வ வாசனுவிசேஷத்தால் சிவஞானம் சற்று விளங்கும்படியாகச் செய்து உயர்ந்த சைவப்பிறப்பைக் கொடுப்பார். அரும்பு மலராகும்வரைப் பல நிலைகளை யடைதல்போல ஆன்மாக்கள் இப்பிறப்பையடையும் வரை கீழ்ச்சமயப் பிறவிகளிலிருந்து படிப்படியாக ஏறுதல் வேண்டும் எல்லாப் பிறவிகளும் ஒழிந்து முத்தியைப் பெறும் பக்குவமாகிய இருவினையொப்பும் மலபரிபாகமும் இப்பிறவியில்தான் வாய்க்கும். இவ்விருவினையொப்பு மலபரிபாகம் நிகழுங்காலத்தில் முற்பிற்பாடின்றிச் சத்திநிபாதமும் அவைகளுக்கு ஏற்படும்.

இருவினையொப்பாவது புண்ணியபாவங்களிலும் அவற்றின் பயனாகிய சுக துக்கங்களிலும் ஆன்மா ஒக்க உவர்ப்புக்கொள்ளுதல்.

மலபரிபாகமாவது மலம் தனது சத்தி தேய்தற்குரிய அனைக்காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதல.

சத்திநிபாதமாவது :— மலம் பரிபாகமடைதற் பொருட்டு அம்மலத்திற் கநுகூலமாய் நின்று ஆன்மாக்களை நடத்திவருவது சிவபிரானது திரோதான சத்தி யென்னும் மறக்கருணையேயாம் மலம் பக்குவமடைந்ததும் இத்திரோதான சத்தி பராசத்தியாக மாறி அறக்கருணையாக விளங்கி மலம் பக்குவப்பட்ட ஆன்மாவின் மாட்டுப்பதியும். அங்ஙனம் பதிதலே சத்திநிபாதம் ஆகும்.

சத்தி — சத்தியினது, நி — ஏற்றமான, பாதம் — வீழ்ச்சி.

———:o:———

## சிவபிரான் மூவகை ஆன்மாக்களுக்கும் அநுக்கிரகிக்கும் முறைமை.

— முத்திதரு
நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல மொன்றனையு
மந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப் — பின்னன்பு
மேவா விளங்கும் ப்ரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப் — பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை — யன்னவனுக்
காதிகுண மாதலினா லாடுந் திருத்தொழிலுஞ்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் — பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியு மதிக்கொழுந்து — மச்சமுற
வாடு மரவு மழகார் திருநுதன்மே
னீடுருவ வன்னி நெடுங்கண்ணுங் — கேடிலயங்
கூட்டுந் தமருகமுங் கோல வெரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும் — வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தா ளிணையுமடியா
ருள்ளத்தி னுட்பிரியா வொண்சிலம்புங் — கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலு
மொன்றமுருந் தோன்றும னுள்ளடக்கி — யென்று
மிறவாத வின்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து — நறவாருந்
தாருலா வும்புயத்தச் சம்பந்த நாதனென்ற
பேரிலா நாதனொரு பேர்புனைந்து — பாரோர்த
முண்டி யுறக்கம் பயமின்ப மொத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி.

முத்தி தரும் நல் நெறி — (சிவபிரான் இவ்வணம் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு) முத்தியைக் கொடுக்கின்ற அழகிய முறையாவது

விஞ்ஞான கலர் — விஞ்ஞானகலருக்கு

நாமம் மலம் ஒன்றினையும் — (அவர்களைப்) பொருந்தியுள்ள ஆணவம் என்னும் ஒரே மலத்தினையும்

அநாதிலேயே — (தனது) இயல்பான ஞானசொரூபத்தோடு

உள் நின்று — அவர்களது அறிவுக்குள் நின்றபடியே நின்று

அறுத்து — போக்கி

அருளி — அநுக்கிரகித்தும்

பின் — பிறகு

அன்பு மேவா விளங்கும் — அன்பு பொருந்தி விளங்குகின்ற

ப்ரளயாகலருக்கு — பிரளயாகலருக்கு

தேவாய் — (நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் முதலிய உறுப்புக்களோடு முத்தொழில் நடாத்தி நின்ற) தனது இயற்கை வடிவையே குருவடிவாகக் காட்டி (அவர்களுக்கு முன்னால் நின்று உபதேசத்தால்)

மலம் கன்மம் தீர்த்து — (அவர்களைப் பற்றியிருக்கும்) ஆணவம் கன்மம் என்னும் இரண்டு மலங்களையும் போக்கி

அருளி — அநுக்கிரகித்தும்

பூவலயத் தன்னின்று நீங்கா — அசுத்த மாயாகாரியமான இவ்வுலகை விட்டு நீங்காத

சகலர்க்கு — சகலருக்கு

அவர்போல் — அவர்களுடைய வடிவுபோலும் குருவடிவாகிய மானுடப் போர்வையில் மறைந்து

முன் நின்று — முன்னிலையில் வந்து நின்று உபதேசித்து

மும் மலம் தீர்த்து—(அவர்களைப்பற்றியிருக்கும்) ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலத்தினையும் போக்கி

ஆட்கொள்கை — அநுக்கிரகித்தும் (வருதல்)

அன்னவனுக்கு — அச்சிவபிரானுக்கு

ஆதி குணம் — ஆதிதொட்டே பெருங்குணமாக உள்ளது.

ஆதலினால் — ஆகையால்

ஆடும் திருத்தொழிலும் — (தனது) திருநடனத் தொழிலையும்

சோதி மணி மிடற்றுச் சுந்தரமும் — ஒளிமிக்க நீல மணிபோன்ற கரிய கண்டத்தின் அழகையும்

('பாதியாம் பச்சை யிடமும்' என்பதை பச்சையாம் பாதி யிடமும் என மாறுக.)

பச்சை ஆம் பாதி இடமும் — பசிய உமாதேவியார் வீற்றிருக்கின்ற பாதிப்பாகமாகிய இடப்பாகத்தையும்
பவளத்திருச்சடை — பவளம்போற் சிவந்த அழகிய சடாமுடியோடு
மேல் வைச்ச — அதன்மேல் தரித்தருளிய
நதியும் மதிக்கொழுந்தும் — கங்கையையும் மூன்றும் பிறைச்சந்திரனையும்
அச்சம் உற ஆடும் அரவும் — கண்டோர் பயங்கொள்ளும்படி ஆடுகின்ற பாம்பையும்
அழகு ஆர் திருநுதல்மேல் — அழகு பொருந்திய திருநெற்றியின் மேலுள்ள
நீடு உருவ வன்னி — மேல் நோக்கி யெரியும் இயல்புடைய அக்கினி மயமான
நெடும் கண்ணும் — மேல் நோக்கி நீண்ட கண்ணையும்
கேடு இல் லயம் கூட்டும் — குற்றமில்லாத கூத்தை நடத்துகின்ற
தமருகமும் — துடியையும்
கோல எரி அகலும் — அழகிய அக்கினித் தகழியையும்
பூட்டு அரவக் கச்சும் — அரையிலே கச்சாகப் பூட்டியிருக்கின்ற ஐந்தலைப் பாம்பையும்
புலி அதளும் — புலித்தோலையும்
வீட்டு இன்ப வெள்ளத்து — பேரின்பக் கடலில்
அழுத்திவிடும் தாளினும் — அடியார்களை ஆழ்த்திவிடுகிற திருவடியைவிட்டும்
அடியார் உள்ளத்தினும் — மெய்யடியார்களது மனதைவிட்டும்
பிரியா — விலகாத
ஒண் சிலம்பும் — இன்ப ஒளி மிக்க சிலம்புகளையும்
கள்ள வினை வென்று — (உயிர்களை) வஞ்சத்தாற் பிணித்து நின்ற இரண்டு வினைகளையும் தொலைத்து
பிறப்பு அறுக்க — (அவைகளின்) சனன துக்கத்தை யொழித்துவிட
சாத்திய வீரக்கழலும்—('நாமே வலியுடையோம்' என்று முழந்தாளில்) அணிந்துள்ள வீரக்கழலையும்
ஒன்றும் உரு தோன்றாமல் — ஆகிய இத்தனையிலும் ஒன்றாலும் தன் உருவம் வெளிப்படாமல்
உள் அடக்கி — அவைகளத்தனையையும் அம்மானுடைப் போர்வையில் மறைத்துக்கொண்டு

என்றும் இறவாத இன்பத்து—எக்காலத்திலும் அழியாத பேரின்பத்திலே எமை இருத்த வேண்டி — என்னைப்போலும் சகல வர்க்கத்தினரை வைப்பதற்கு விரும்பி

('பிறவா முதல்வன் பிறந்து, நறவாரும் தாருலாவும்புயத்துச் சம்பந்த நாதனென்ற பேரிலா நாதனொருபேர் புனைந்து' என்பதை பிறவா முதல்வன் பேரிலா நாதன் பிறந்து நறவாரும் தாருலாவும் புயத்துச் சம்பந்த நாதனென்ற ஒருபேர் புனைந்து என மாறுக.)

பிறவா முதல்வன் — மாதா கருப்பத்துள் தங்குதல், யோனிவழியாகப் பிறத்தல் என்னும் இவை சிறிதும் முடியாத தலைவனும்

பேர் இலா நாதன்—தன்னியல்பு முழுவதையும் விளக்கத்தக்க யாதொரு பெயரையுந் தனக்கில்லாத ஞான சொருபியும் (ஆகிய சிவபிரான்)

பிறந்து — ஆசாரிய மூர்த்தியாக வெளிப்பட்டும்

நறவு ஆரும் — தேன் நிறைந்த

தார் உலாவும் புயத்து — பூமாலை கிடந்தசையுந் தோள்களையுடைய

சம்பந்த நாதன் என்ற — மறைஞான சம்பந்த சிவன் என்ற

ஒரு பேர் புனைந்து — ஒப்பற்ற திருநாமத்தைத் தாங்கியும்

பாரோர்தம் — உலகிலுள்ள ஆன்மாக்களது

உண்டி உறக்கம் பயம் இன்பம் — உண்ணுதல், உறங்குதல், அஞ்சுதல், சுகித்தல் முதலியவற்றை

ஒத்து ஒழுகிக்கொண்டு — தானும் அப்படியே செய்து அவர்களில் ஒருவனாக இருந்துகொண்டு

மகிழ்ந்த — ஆநந்திக்கிற

குணம் — (அவனது) அதிசயமான குணமானது

போற்றி — அடியேனைக் காத்தருள்க.

சிவபிரான் ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலருக்கு அவரறிவுக்குள் அறிவாகாரமாய் நின்றே அம்மலத்தைப்போக்கி அநுக்கிரகித்தலும், ஆணவம், கர்மம் என்னும் இரண்டு மலங்களைமட்டுமுடைய பிரளயாகலருக்கு நான்கு தோளும், மூன்று கண்ணும், காள கண்டமும் முதலிய உறுப்புக்களைத் தாங்கித் தமது இயற்கைவடிவோடு முன் வந்துநின்று அம்மலங்களைப்போக்கி அநுக்கிரகித்தலும், ஆணவம், கர்மம், மாயை என்னும் மூன்று மலங்களையுமுடைய சகலருக்கு அவரைப்போல் மானிடச் சட்டை சாத்தித் தமது இயற்கை வடிவை அதற்குள் மறைத்துக்கொண்டு

தேசிகமூர்த்தியாக அவர்முன் தோன்றி அம்மலங்களைப்போக்கி அநுக்கிரகித்தலுஞ் செய்வார் இங்கு அநுக்கிரகித்தல் என்பது ஞானத்தைக்கொடுத்தல். இவ்வநுக்கிரகமும் அம்மூவகை ஆன்மாக்களுள் முன் கூறப்பட்டபடி இருவினையொப்பு மலபரிபாக மெய்திச் சத்திநிபாதங் கைவந்த பக்குவான்மாக்களுக்கே செய்யப்படும். மேல்வரும் பகுதிகளிற் காணப்படும் அநுக்கிரகங்களும் அந்தப் பக்குவான்மாக்களுக்கேயாதல் கண்டுகொள்க.

---:o:---

## சிவபிரான் தீக்ஷையால் ஆணவமலத்தை நீக்குதல்.

— மிண்டாய

வாறு சமயப் பொருளுமறி வித்தவற்றிற்
பேறின்மை யெங்களுக்கே பேறுக்கித் — தேறாத
சித்தந் தெளியத் திருமேனி கொண்டுவரு
மத்தகைமை தானே யமையாமல் — வித்தகமாஞ்
சைவ நெறியிற் சமய முதலாக
வெய்து மபிடேக மெய்துவித்துச் — செய்யதிருக்
கண்ணருளா னோக்கிக் கடியபிறப் பாற்பட்ட
புண்ணு மிருவினையும் போயகல — வண்ணமலர்க்
கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி — யொத்தொழுகுஞ்
சேணு திருள்வடிவஞ் செங்கதிரோன் பானிற்பக்
காணு தொழியுங் கணக்கேபோ — லாணவத்தி
னூதி குறையாம லெம்பா லணுகாம
னீதி நிறுத்து நிலைபோற்றி.

மிண்டு ஆய — பிழை பட்ட

ஆறு சமயப் பொருளும் — ஆறு புறச்சமயங்களின் கோட்பாடுகளை யெல்லாம்

அறிவித்து — (ஆசாரிய மூர்த்தியாய் வந்த சிவம்) உபதேசித்து

அவற்றில் பேறு இன்மை — அச்சமயங்களில் யாதொரு மெய்ப்பயனுமில்லை என்பதை

எங்களுக்கே பேறு ஆக்கி — எம்போன்ற அடியார்களுக்கு மட்டுமே உள்ளத்தில் நன்றாகப் பதியும்படி எடுத்துக்காட்டி
தேறாத சித்தம் — (உண்மையை) யுணர மாட்டாத (எங்களது) மனமானது
தெளிய — தெளிவடையும்படி
திருமேனி கொண்டுவரும் — (தான்) ஆசாரியனாய் வெளிப்படுதலாகிய
அத்தகைமைதானே — அவ்வொரு காரியம் மட்டும்
அமையாமல் — போதாதென்று
வித்தகம் ஆம் — ஞானமயமான
சைவ நெறியில் — வைதிக சைவ சன்மார்க்கத்தில்
('சமய முதலாக வெய்து மபிடேக மெய்து வித்து' என்பதை எய்தும் சமய முதலாக அபிடேக மெய்துவித்து என மாறுக.)
எய்தும் — சொல்லப்பட்ட
சமயம் முதல் ஆக — சமயதீக்ஷை முதல்
அபிடேகம் — ஆசாரியாபிஷேகம் வரை
எய்துவித்து — எங்களுக்குச் செய்து வைத்து
('செய்ய திருக்கண்ணருளானோக்கிக் கடிய பிறப்பாற்பட்ட புண்ணுமிருவினையும் போயகல' என்பதை கடிய பிறப்பாற்பட்ட புண்ணுமிருவினையும் போயகலச் செய்ய திருக்கண்ணருளானோக்கி எனமாறுக)
கடிய பிறப்பால் பட்ட — கொடிய பிறவிகளால் உண்டாய
புண்ணும் — துன்பங்களும்
இருவினையும் — புண்ணிய பாவங்களும்
போய் அகல — விட்டு நீங்கும்படி
செய்ய திருக்கண் அருளால் — (தனது) சிவந்த திருக்கண்களிலிருந்து பொழிகின்ற கருணைகொண்டு
நோக்கி — நோக்குதலாகிய நயன தீக்ஷையுஞ் செய்து
வண்ணம் மலர் கைத்தலத்தை — அழகு பொருந்திய தாமரைப்பூப்போன்ற திருக்கைகளை
வைத்து — (எங்கள் தலைமேல்) வைத்து
அருளி — ஸ்பரிச தீக்ஷையுஞ் செய்து
கல் ஆய நெஞ்சு உருக்கி — கல்லுப்போன்ற (எங்களது) உள்ளத்தையெல்லாம் இளகி
மெய் தலைமை எல்லாம் — அழியாப் பொருள்களாகிய பதி பசு பாசம் என்னும் மூன்றினது உண்மைகளை யெல்லாம்

விரித்து ஓதி — எங்களுக்குத் தெளிவாக உபதேசித்து

('ஒத்தொழுகுஞ் சேணாரிருள் வடிவம்' என்பதை சேண் ஒத்தொழுகு மாரிருள் வடிவம் என மாறுக.)

சேண் — ஆகாயத்தை
ஒத்து ஒழுகும்—(சூரியன் உதியாக்காலத்தில் தன் மயமாக்கி) அதனோடு விரவியிருக்கின்ற
ஆர் இருள் வடிவம் — நிறைந்த இருளின் சொரூபம்
செம் கதிரோன் — சிவந்த இளஞ்சூரியன்
பால் நிற்ப — (கிழக்குப்) பக்கத்தில் உதித்தவுடன்
காணாது ஒழியும் — (அவ்வாகாயம் ஒளிமயமாகும்படி விடுத்துத்) தன் சத்தி மடங்கித் தொலைகின்ற
கணக்கே போல் — முறைமை போல
ஆணவத்தின் — ஆணவமலத்தினது
ஆதி குறையாமல் — (அநாதி நித்தியம் என்னும்) பொருட்டன்மை கெடாமலும்
எம் பால் அணுகாமல் — (அது) எங்களை முன்போற் பிணித்துத் தன் மயமாக்காமலும்
நீதி நிறுத்தும் — சத்தியத்தையே நிலையிடுகின்ற
நிலை — அவ்வாசாரிய மூர்த்தம்
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

சைவசமயத்தைத் தவிர மற்றச் சமயங்களில் முத்திப்பேறில்லையென்பதை ஆசாரிய மூர்த்தியாக வந்தவர் பக்குவான்மாவுக்கு விளக்கித் தமது திருமேனித் தரிசனம் மட்டும் போதாதென்று சமயம் விசேஷம் நிருவாணம் ஆசாரியாபிஷேகம் என்னுந் தீக்ஷைகளையும் நயன தீக்ஷையையுஞ் செய்துவைப்பார். இத்தீக்ஷையின் பயன் ஆன்மாவின் பிறப்பிறப்புத் துன்பம் நீங்குதலாம். பின்னர் அத்தேசிக மூர்த்தி ஸ்பரிச தீக்ஷையுஞ் செய்து பதி பசு பாச வுண்மைகளை யுபதேசித்து ஆணவமாகிய அநாதி பந்தம் இனி அவ்வான்மாவுக்கு இல்லையாமாறு செய்வார். ஆணவபந்தம் இல்லையாவது கொண்டு ஆணவமே இல்பொருளாய் விடுமென்று எண்ணுவது தவறு, ஆன்மாவைப் பந்தித்து அதற்கு அஞ்ஞானத்தைக் கொடுத்தல் என்னும் அம்மலத்தின் செயல் மட்டுமே நிகழாது எனபதே கருத்து. அதாவது ஆணவத்தின் சத்தி மடங்குதலாம்.

இவ்வுண்மையை விளக்கும் உவமானம்:— இராக்காலத்தில் இருள் ஆகாயத்தோடு கலந்து அதனை இருள் மயமாக்குகின்றது. ஆனால் பகலில் அந்த இருளுக்கு அச்செயல் இல்லாமற் போகின்றது. அங்ஙனங் கெடுப்பது சூரியனுடைய ஒளியேயாகும் ஆனால் இருள் என்னும் பொருள் மட்டும பகற்காலத்திலும் இல்பொருளாகாமல உள்பொருளாகவே யிருப்பதாகும். அதாவது பகலில் இருளானது கெடாமல் அதன் சத்திமட்டும் இல்லாமற் போகுமென்பதாம்.

ஆகாயம்போல் ஆன்மாவும், இருள்போல் ஆணவமும், சூரியவொளிபோல் சிவஞானப் பிரகாசமும் என வறிக.

———:o:———

## சிவபிரான் தனது உண்மைநிலையை ஆன்மாக்களுக்குத் தரிசிப்பித்தல்.

———

— மேதக்கோர்

செய்யுஞ் சரியை நிகழ்கிரியா யோகத்தா
லெய்துஞ்சீர் முத்திபத மெய்துவித்து — மெய்யன்பாற்
காணத் தகுவார்கள் கண்டாற் றமைப்பின்பு
காணத் தகுஞான நன்னெறியை — வீணே
யெனக்குத் தரவேண்டி யெல்லாப் பொருட்கு
மனக்கு மலரயன்மால் வானோர் — நினைப்பினுக்குந்
தூரம்போ லேயணிய சுந்தரத்தா ளென்றலமே
லாரும் படிதந் தருள்செய்த — பேராளன்
தந்தபொரு ளேதென்னிற் றன்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி — முந்தியென்ற
னுள்ளமென்று நீங்கா தொளித்திருந்து தோன்றிநிற்குங்
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி.

மேதக்கோர் — (அகப்பற்று புறப்பற்றுக்களை நீக்கிய) பெரியோர்களை
செய்யும் — (அவர்கள்) அநுசரித்து வருகின்ற

('சரியை நிகழ்கிரியா யோகத்தால்' என்பதை நிகழ்சரியை கிரியா யோகத்தால் என மாறுக.)

திகழ் சரியை கிரியா யோகத்தால் — சிறந்த சரியை கிரியை யோகம் என்னும் மூன்று மார்க்கங்களால்
எய்தும் — (அவற்றின் பயனாக) வருகின்ற
சீர் முத்தி பதம் — சிறந்த பதமுத்திகளில்
எய்துவித்தும் — சேர்த்தும்
மெய் அன்பால் — உண்மையான அன்பின் வழியாக
காணத்தகுவார்கள்—(சிவத்தைத்) தரிசிக்கும்படியான தகுதியையுடையவர்களாகி
('கண்டாற்றமை' என்பதை தமைக்கண்டால் என மாறுக)
தமைக்கண்டால்—தமது ஆன்மசொரூபத்தைச் (சிவ சொரூபத்தின்முன்) பார்த்தால்
பின்பு — அப்பொழுது
காணத்தகும் — (அது சூரியன்முன் மின்மினிபோல் சிறுமையடைதலைக்கண்டு) வெட்கப்படுவதற்கேற்ற
ஞான நல் நெறியை— (நாலாவது மார்க்கமாகிய) ஞானமென்னும் சன்மார்க்கத்தை
('வீணே யெனக்குத் தரவேண்டி' என்பதை எனக்கு வீணேதரவேண்டி என மாறுக)
எனக்கு — (யாதொரு பிரதியுபகாரத்துக்கும் யோக்கியதை யில்லாத) எனக்கு
வீணே தரவேண்டி — கைம்மாறு கருதல் முதலிய ஒன்றுங் கலத்தலில்லாத தனித்த கிருபை மேலீட்டால் கொடுக்க விரும்பி
எல்லாப் பொருட்கும் — உலகப் பொருட்கள் அனைத்தினுக்கும்
மனக்கும் — (மக்களது) மனசுக்கும்
மலர் அயன் — தாமரைப் பூவிலிருக்கின்ற பிரமன்
மால் — விஷ்ணு
வானோர் — தேவலோகவாசிகள்
நினைப்பினுக்கும் — (என்னும் இவர்களது) மனசுக்கும்
தூரம் போலே — எட்டாததாயிருந்தும்
அணிய — (அவ்விடங்களிலெல்லாம்) கலந்திருக்கிற
சுந்தரத்தாள் — அழகிய திருவடிகளை
என் தலைமேல் — அடியேனது சிரசின்மேல்
ஆரும்படி — பொருந்தும்படி
தந்து — வைத்து

அருள் செய்த — திருவடி தீக்ஷை செய்தருளிய
பேர் ஆளன் — பெரியோனாகிய அவ்வாசாரிய மூர்த்தி
தந்த பொருள் — எனக்கு உபதேசித்த விஷயம்
ஏது என்னில் — என்னவென்றால்
தான் வேறு நான் வேறு ஆய் — அவன் வேறு பொருள் நான் வேறு பொருள் என்னும்படி ஒரு காலத்தில் ஒருவரை யொருவர் பிரிந்திருந்து
வந்து புணரா வழக்கு — இடைக்காலத்தில் இருவரும் கூடிக்கலவாத உண்மையை
ஆக்கி — விளக்கி
மூந்தி — அநாதியே தொட்டு
என்றன் உள்ளம் — எனது அறிவை (விட்டு)
என்றும் — (கேவலம் சகலம சுத்தம் என்னும்) மூன்று காலத்தினும்
நீங்காது ஒளித்திருந்து — விலகாமலும் எனக்குத்தெரியாமல் மறைவாகவும என்னோடு கலந்திருந்து
தோன்றி — (இப்போது தேசிக மூர்த்தியாய் என்முன்) வெளிப்பட்டு
நிற்கும் கள்ளம் — அப்படிக்கலந்து நிற்கும் இரகசியத்தை
இன்று — எனது இச்சுத்தநிலையில்
காட்டும் — தரிசனப்படுத்துகிற
கழல் — (சிவபிரானது) திருவடிஞானம்
போற்றி — அடியேனைக் காத்தருள்க.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் முறையே தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப்படும். இவற்றிற்கு முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கும் பயன்களாகும். சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் மூன்றும் பதமுத்திகளாம்.

ஞானம் என்னுஞ் சந்மார்க்கத்தில் நிற்கின்ற பெரியோர் சிவ சந்நிதானத்தில் ஆன்மப்பிரகாசம் ஒளிமழுங்கும் என்பதைத்தரிசித்து அறிவார்.

பெத்தகாலத்தில் சிவமும் ஆன்மாவும் ஒன்றைவிட்டொன்று பிரிந்து வெவ்வேறிடங்களிலிருந்து மூத்திக்காலத்தில் கூடிக்கலந்தனவென்பது தவறு. பெத்தம் மூத்தி யிரண்டிலுமே சிவம் ஆன்மாவோடு கலந்தே யிருக்கும். ஆனல் அக்கலப்பு பெத்தகாலத்தில் ஆன்மாவால் நேரிற்காண முடியாதபடி மறைந்தும், மூத்திக்காலத்தில் நேரிற்காண முடியும்படி

வெளிப்பட்டும் இருக்கும். பெத்தகாலத்திலும் சிவம் ஆன்மாவோடு கலந்துள்ளது என்னும் உண்மை ஆன்மாவுக்கு முத்திக்காலத்திற்றான் தரிசனமாம்.

———:o:———

## சிவபிரான் ஆன்மாக்களுக்கு ஆன்ம சொரூபத்தையும் கேவல சகல சுத்தங்களையும் தரிசிப்பித்தல்.

———

— வள்ளன்மையாற்

றன்னைத் தெரிவித்துத் தன்றாளி னுட்கிடந்த
வென்னைத் தெரிவித்த வெல்லையின்கண் — மின்னாரும்
வண்ண வுருவ மருவுங் குணமயக்க
மெண்ணுங் கலைகால மெப்பொருளு — முன்னமெனக்
கில்லாமை காட்டிப்பின் பெய்தியவா காட்டியினிச்
செல்லாமை காட்டுஞ் செயல்போற்றி.

வள்ளன்மையால் — (தனது) உதாரத்தன்மையினால்
தனைத்தெரிவித்து — தனது சொரூபத்தையும் எனக்குத் தரிசனப்படுத்தி
தன் தாளின் உள் கிடந்த — தனது அருளமுதக்கடலினுள் (அவ்வமுதத்தை அறிவால் நுகராமல் வறிதே) கிடந்த
என்னைத் தெரிவித்த — எனது ஆன்மசொரூபத்தையுங் காட்டிய
எல்லையின் கண் — சமயத்தில்
மின் ஆரும் — மின்னலோடு பொருந்திய
வண்ண உருவம் — (அழியும்) இயல்பையுடைய உடம்பும்
மருவும் — (ஆன்மாவைப்) பொருந்திய
குணமயக்கம் — முக்குணங்களின் கூட்டமும்
எண்ணும் — (ஆன்மா) அறிதற்குக் கருவிகளா யுதவுகின்ற
கலை காலம் — கலா தத்துவம் கால தத்துவம் முதலிய
எப்பொருளும் — எல்லா மாயாகாரியப் பொருள்களும்

('முன்னம் எனக்கு' என்பதை எனக்கு முன்னம் என மாறுக.)

எனக்கு — அடியேனுக்கு
முன்னம் — முதலாவதாகிய கேவல நிலையில்
இல்லாமை காட்டி — இல்லாமலிருந்ததைத் தரிசனப்படுத்தி

பின்பு — (இரண்டாவதாகிய) சகல நிலையில்

எய்திய வா(று) காட்டி — அவைகள் கிடைத்த விதத்தைத் தரிசனப்படுத்தியும்

இனி — (மூன்றாவதாகிய) இச்சுத்த நிலையில்

செல்லாமை காட்டும் — இல்லாமல் தொலைந்து போவதைத் தரிசனப்படுத்துகின்ற

செயல் — (சிவபிரானது) அருள் விளையாட்டு

போற்றி — அடியேனைக்காத்தருள்க.

கேவலம்:— ஆன்மா ஆணவத்தோடுமட்டும் சம்பந்தப்பட்டு மாயா கர்மங்களோடு சம்பந்தப்படாத நிலை.

சகலம் — ஆன்மா மூன்றுமலங்களோடும் சம்பந்தப்பட்ட நிலை.

சுத்தம் — ஆன்மா மும்மலமும் நீங்கிச் சிவமயமாயிருக்கும் நிலை.

———:o:———

## சிவபிரான் ஆன்மாக்களைத் தாளுக்கு அடிமைகொண்டருளுதல்.

— எல்லாப்போற்

தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
யெம்மைப் புறங்கூறி யின்புறச் — செம்மை
யவிகாரம் பேசு மகம்பிரமக் காரர்
வெளியா மிருளில் விடாதே — யொளியாய்நீ
நின்ற நிலையே நிகழ்த்தி யொருபொருள்வே
றின்றியமை யாமை யெடுத்தோதி — யொன்றாகச்
சாதித்துத் தம்மைச் சிவமாக்கி யிப்பிறவிப்
பேதந் தனிவினைப பேதமுறாப் — பாதகரோ
டேகமாய்ப் போகா மலெவ்விடத்துங் காட்சிதந்து
போகமாம் பொற்றாளி னுட்புணர்த்தி — யாதியுட
னிற்க வழியா நிலையிதுவே யென்றருளி
யொக்க வியாபகந்த னுட்காட்டி — மிக்கோங்கு
மானந்த மாக்கடலி லாரா வமுதளித்துத்
தான்வந்து செய்யுந் தகுதியினா — லூனுயிர்தான்
முன்கண்ட காலத்து நீங்காத முன்னோனை
யென்கொண்டு போற்றிசைப்பே னியான்.

எல்லாம் போய் — எல்லாத்தத்துவங்களும் நீங்கி
தம்மை தெளிந்தார் ஆய் — தமது (ஆன்மாவினது) சொரூபத்தைத் தெளிவாகக் கண்டவர்போல
தாமே பொருள் ஆகி — தாமே பிரமம் என்று கொண்டு
எம்மை — (சிவத்துக்கும் ஆன்மாவுக்கும் முத்தியிலும் ஆண்டான் அடிமைச் சம்பந்தங் கூறுகின்ற) எமபோன்ற சைவசித்தாந்திகளை
புறம் கூறி — (எங்கள் கொள்கை தவறென்று) காணாத விடங்களிற் பழித்து
இன்பு உற்று — தமது இன்பத்தைத் தாமே யனுபவித்து
செம்மை — பிரமத்தை
அவிகாரம் பேசும் — நிர்விகாரி யென்றும் பேசித்திரிகின்ற
அகம் பிரமக்காரர் — 'நான் பிரமம்' என்னும் ஏகானமவாதிகளுடைய
வெளி ஆம் இருளில் — வெட்டவெளியான அந்தகாரத்தில்
விடாதே — (என்னை) மயங்கவிடாமலும்
ஒளியாய் — சுயம்பிரகாசமாய்
நீ நின்ற நிலை (ஏ) — நீ (பதி) நிற்கின்ற உண்மையை
நிகழ்த்தி — பேசி
('ஒரு பொருள் வேறு' என்பதை வேறு ஒரு பொருள் என மாறுக.)
வேறு ஒரு பொருள் — உனக்கு வேறான மற்றொரு பொருளாகிய ஆன்மா
இன்றியமையாமை — நிச்சயமாக வுண்டு என்பதை
எடுத்து ஓதி — எடுத்துப்பேசி
ஒன்று ஆக — அப்படிப் பொருளால் வேறாயினும் கலப்பால் நீயும் அதுவும் ஒன்றாகவே யிருப்பன வென்று
சாதித்து — பேசி (விட்டு)
தம்மை — (முத்தியில் மட்டும்) ஆன்மாக்களை
சிவம் ஆக்கி — சிவன்களாக ஆக்கிவிடுவதால்
இப்பிறவிப் பேதந்தனில் — பிறவி பேதங்களில் ஒன்றாகிய இம்மனிதப் பிறவியில்
இன்ப பேதம் — சீவன் முத்தியின்பத்தையும் பரமுத்தியின்பத்தையும்
உறா — அனுபவிக்கக் கொடுத்துவையாத
பாதகரோடு — (சிவசமவாதிகளாகிய) மாபாவிகளோடு
ஏகம் ஆய் போகாமல் — நான் நேசம் பண்ணி நாசமாய்ப்போக விடாமலும்
எவ்விடத்தும் — எல்லாவிடங்களிலும்
காட்சி தந்து — குரு லிங்க சங்கமங்களாய் வெளிப்பட்டு எனக்குத் தரிசனங்கொடுத்து

போகம் ஆம் — பேரின்பமயமாகிய
பொன் தாளின் உள் — அழகிய திருவடிஞானத்தினுள்
புணர்த்தி — என்னைப்பொருத்தியதால்
ஆதியுடன் நிற்க — முதல்வனோடு (நான்) அழுந்தி நிற்பதாகிய
('அழியா நிலையிதுவே' என்பதை இதுவே அழியாநிலை என மாறுக.)
இதுவே — இந்த நிலை தானே
அழியா நிலை என்று — கெடாத சாயுச்சிய முத்தியாகுமென்று
அருளி — (எனக்குக்) கொடுத்து
('ஒக்க வியாபகந் தன்னுட் காட்டி' என்பதை ஒக்க தன்னுள் வியாபகங் காட்டி என மாறுக.)
ஒக்க — தன்னுடையது போன்றதாய்
தன் உள் — (ஆனால்) தனக்குள் அடங்கியதாய்
வியாபகம் — (நான்) வியாபகமாதலை
காட்டி — உண்டெனக்காட்டி
மிக்கு ஓங்கும் — மிகுந்து விளங்குகின்ற
ஆநந்த மாகடலில் — பேரின்ப மயமான பெரிய கடலில்
ஆரா அமுது — தெவிட்டாத (தான் ஆகிய) அமிர்தத்தை
அளித்து — நுகரக்கொடுத்ததோடமையாமல்
தான் வந்து செய்யும்—(இத்தனையும்) தானே (வலிய) வந்து செய்கின்ற
தகுதியினால் — (பேரருளுடைமை என்னும்) தகுதியினால்
ஊன் உயிர் தான் — உடம்போடு கூடி உயிர் இருத்தலாகிய
முன் கண்ட காலத்தும் — முதலாவது கிடைத்த பெத்தகாலத்திலும்
நீங்காத முன்னோனை — என்னை விட்டு விலகாத (சொற்பதங்கடந்த) தொல்லோனாகிய சிவபிரானை
('என்கொண்டு போற்றிசைப்பே னியான்' என்பதை யான் என் கொண்டு போற்றிசைப்பேன் என மாறுக.)
யான் — அடியேன்
என்கொண்டு — எந்தவிதமாக
போற்றி இசைப்பேன் — துதித்துப் புகழுவேன்? (ஒரு விதத்தாலும் முடியாது).

ஏகான்மவாதி 'நானே பிரமம்' என்று சொல்லிப் பிரமத்தைத் தவிர வேறு பொருள் முக்காலத்து மில்லை யென்பான். இப்படி ஆன்மாவே பிரமம் என்னும் இவனுக்கு முத்தியின்பமாவது தன்னைத்தானே யநுபவி

த்தல், பிரமமே ஆன்மாவாக விகாரமெய்திற்று என்று சொல்லிப் பின் அப் பிரக்ஞையற்ற 'பிரமம் நிர்விகாரி' என்று பிரமத்துக்கு இலக்கணஞ் சொல்லுதலும் இவனுக்கோ ரதிசய வியல்பு.

சிவசமவாதி மதத்தில் பதிபசுபாசங்களை யொப்புக்கொண்டு முத்தியில் மட்டும் ஆன்மாக்களெல்லாம் சிவன்களாய்விடும் என்பான். ஒவ்வொரு முத்தரும் ஒவ்வொரு சிவனாகலின் அவர் தம்முடையதாகிய சிவத்துவத்தை அநுபவித்தலே சிவாநுபவம் என்பது இவனது முத்தியாம்.

ஆகவே இவ்விருவகையினரும் பதியைப் பசுவென்றும், பசுவைப் பதியென்றுங் கூறுகிற பாவிகளாவார். ஆசாரியரால் கிடைத்த பேறு அழிந்துபடாமலிருக்கவேண்டுமாயின் அப்பேறுபெற்ற தூயோர் மறந்தாயினும் அப்பாதகர்களோடு இணங்குதல் கூடாது. ஏனெனில் அவர்கள் தமது அஞ்ஞானோபதேசத்தால் அப்பேற்றை யிழப்பிப்பார்கள் என்க. அவ்வஞ்ஞானிகள் எல்லாப் பெருங்கேட்டுக்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்தைக் காட்டிலும் மிகக்கொடியர் என்பதைச் சிவஞான மாபாடியத்துட் காண்க.

சைவசித்தாந்த முத்தி :— பேறுபெற்ற ஆன்மாக்கள் அப்பேறு அழிந்துபடாமல் நிலைபெறற்பொருட்டுக் குரு லிங்க சங்கம சேவை செய்து பின்னர் சிவபிரானது பேரின்பமயமாகிய திருவடிஞானத்தைப் பெற்று அதில் அழுந்திக்கிடக்கும இதுவே சாயுச்சிய நிலையாகும். இது விதேககைவல்லியமென்றும் பரமுத்தி யென்றும் சொல்லப்படும். இம்முத்தியில் ஆன்மா சிவவியாபகத்துள் அடங்கிய வியாபகமாய் நின்று சிவத்தையநுபவித்துக்கொண்டிருக்கும். இம்முத்தியிலும் ஆன்மா அடிமையே; சிவனே ஆண்டவன், ஆன்மா சிவமாகி யொழிதலும், சிவத்தைப்போன்ற சிவமாகிச் சமமா யொழிதலும் இல்லவே இல்லை. இத்தகைய சுத்தாத்வைத சைவசித்தாந்த முத்தியின்பத்தை ஒன்றுக்கும் பற்றாத அடியேங்களுக்கு வலிய வந்து உபகரிக்கின்றார் எங்கள் கருணாசாகரரான சிவபிரானார்.

போற்றிப் பஃறொடைப் பதவுரை

முற்றிற்று.

———:o:———

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

ஸ்ரீ உமாபதிசிவம் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

—:o:—

# வினா வெண்பா.

## (பதவுரை)

1. நீடு மொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூட லரிது கொடுவினையேன் — பாடிதன்மு
னொன்றவார் சோலை யுயர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ.

வார்சோலை உயர் — (தேன்) ஒழுகுகின்ற சோலைகளால் மேன்மையடைந்த

மருதச் சம்பந்தா — மருதநகரைப் படைவீடாகக் கொண்டருளிய மறைஞான சம்பந்த மகா முனிவரே!

நீடும் ஒளியும் — விரிந்த பிரகாசமும்

நிறை இருளும் — நெருங்கிய இருளும்

ஓர் இடத்து — ஒரே யிடத்தில்

கூடல் அரிது — சேர்ந்திருத்தல் முடியாது.

(அங்ஙனமாக)

இதன் முன் — ஆணவமலத்தோடு

நீ — தேவரீரும்

கொடுவினையேன் பாடு — பாவியேனிடத்தில்

ஒன்ற — அத்துவிதமாக

நின்றவாறு — இயைந்திருக்கும் விதம்

எவ்வாறு — எப்படி?

இதன் என்னும் அண்மைச்சுட்டு ஆணவத்தைச்சுட்டி நின்றது, பெத்தத்தில் அதுவே ஆன்மாவுக்கு அநுபவமாதலின்.

தேவரீர் என்பது சிவத்தின் மேலது.

ஆணவம் இருள் மயம். சிவம் ஒளிமயம். இப்படி வேறுபட்ட தன்மைகளையுடைய ஆணவமும் சிவமும் ஓரேயிடமாகிய ஆன்மாவின்மாட்டும் பொருந்தியிருப்பது எப்படி?

———:o:———

2. இருளி லொளிபுரையு மெய்துங் கலாதி
மருளி னிலையருளு மாறுங் — கருவியிவை
நீங்கி னிருளா நிறைமருதச் சம்பந்தா
ஈங்குனரு ளாலென் பெற.

இருளில் — (ஆன்மாவுக்கு) ஆணவம் மட்டும் சம்பந்தித்திருக்கும்போது
ஒளி — சிவம்
புரையும் — மறைந்து நிற்கும்.
எய்தும் — (மாயையினின்றும்) காரியப்பட்ட
கலாதி — கலை முதலிய தத்துவங்களும்
மருளின் நிலை — அஞ்ஞான நிலையை
அருளும் — கொடுக்கும்.
மாறும் கருவியிவை — மயக்கத்தைச் செய்கின்ற இத்தத்துவங்கள்
நீங்கின் — விலகி விட்டாலும்
இருள் ஆம் — அஞ்ஞானமே உண்டாகும்.

(ஆகையால்)

நிறை மருதச் சம்பந்தா — (வளங்கள்) மலிந்த மருதநகரைப் படைவீடாகக் கொண்டருளிய மறைஞான சம்பந்த மகாமுனிவரே!
ஈங்கு — இந்த நிலைகளில்
உன் அருளால் — சிவ கிருபையால்
என் பெற — ஆன்மாவுக்குக் கிடைப்பது என்ன?

ஆன்மாவுக்குத் தத்துவங்கள் கூடின காலத்திலும், கூடாத காலத்திலும் சித்திப்பது அஞ்ஞானமேயாயின், சிவம் அவைகளைக் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய அருட்செயலால் ஆன்மாவுக்குக் கிடைப்பது என்ன?

———:0:———

3. புல்லறிவு நல்லுணர்வ தாகா பொதுஞான
மல்லதில துள்ளதெனி லந்நியமாந் — தொல்லையிரு
ளானமலை யாவா றுயர்மருதச் சம்பந்தா
ஞானமலை யாவாய் நவில்.

ஞானம் பொது — ஞானம் என்ற பெயர் ஒற்றுமையால் மட்டும்
புல் அறிவு — (ஆன்மாவினது) சிற்றறிவு
நல் உணர்வது — சிவஞானமாக
ஆகா — மாறாது
அல்லது — அன்றியும்
இலது — (மலபரிபாகத்தின் முன்) இல்லாத சிவஞானம்
உளது எனில் — (அப்பாகத்தின் பின்) உண்டாகும் என்றால்
அந்நியம் ஆம் — ('உள்ளதே தோன்றும்' என்னும் சற்காரிய வாதத்திற்கு) விரோதம் ஏற்படும்.
உயர் மருதச் சம்பந்தா — மேன்மை தங்கிய மருதக்கரைப் பாடிவீடாகக் கொண்டருளிய மறைஞானசம்பந்த மகா முனிவரே!
ஞான மலை ஆவாய் — ஞானத்தால் மலைபோல் உயர்ந்தவரே!
தொல்லை இருள் ஆனம் — அனாதியாகிய ஆணவமலத்தின் கொடுமை
அலையாவாறு — (என்னைத்) துன்புறுத்தாத மார்க்கத்தை
நவில் — சொல்லியருளுக.

ஆணவநீக்கத்திற்கு ஆன்மஞானம் சிவஞானமாக மாறுதல் வேண்டும், மாறுவதெப்படி?

———:o:———

4. கனவு கனவென்று காண்பரிதாங் காணில்
நனவி லவைசிறிது நண்ணா — முனைவனரு
டானவற்றி லொன்றா தடமருதச் சம்பந்தா
யானவத்தை காணுமா றென்.

கனவு — கனா நிலையிலிருக்கும்போது
கனவு என்று — (காணும் கனவைக்) கனவுதானென்று
காண்பரிது ஆம் — தெரிந்துகொள்ளமுடியாது.
நனவில் — சாக்கிரத்தில்
காணில் — (அதனைக் கனவென்று) தெரிகிறோமேயென்றால்
அவை — கனவிற்கண்ட நிகழ்ச்சிகள்

சிறிதும் — கொஞ்சமேனும்

தண்ணு — சாக்கிரத்தில் மயங்கி யறிதலின்றி உள்ளவாறு அறியப்படுவ தில்லை (ஆகையால் தெரியமுடியாது).

(இறையருள் கொண்டு தெரிகிறேம் என்றால்)

முனிவன் அருள்தான் — சிவபிரானது திருவருளானது

அவற்றில் ஒன்று — அவத்தைகளிற் பொருந்தாது.

(ஆகையால்)

தட மருதச் சம்பந்தா — வயல்கள் சூழ்ந்த மருதநகரைப் படைவீடாகக் கொண்டருளிய மறைஞான சம்பந்த மகாமுனிவரே!

யான் — நான்

அவத்தை — ஐந்து அவத்தைகளையும்

காணுமாறு — தரிசிக்கும் விதம்

என் — எப்படி?

ஆன்மா நனவில் தூலவுடம்புகொண்டு விளையாடும்: கனவில் அவ்வுடம்பைவிட்டு வேறேருடம்பாகிய சூக்குமவுடம்பு கொண்டு விளையாடும். (இது சிற்றுரையிற் கண்டது.)

ஆன்மா அவத்தைகளைத் தரிசிப்பது எப்படி?

———:o:———

5. அறிவறிந்த தெல்லா மசத்தாகு மாயின்
குறியிறந்த நின்னுணர்விற் கூடா — பொறிபுலன்க
டாமா வறியா தடமருதச் சம்பந்தா
யாமா றறிவா ரினி.

அறிவு — ஆன்ம அறிவால்

அறிந்தது — அறியப்பட்டனவாகிய

எல்லாம் — எல்லாப் பொருள்களும்

அசத்து ஆகும் — அழிவுடையனவாகும்.

ஆயின் — அங்ஙனமாயின் (அதனால்)

குறி இறந்த — சுட்டுக்கடங்காத

நின் உணர்வில் — (உள்பொருளாகிய) சிவஞானத்தை

கூடா — அறியமுடியாது.

பொறி புலன்கள் — ஐம்பொறிவாயிலாய் வரும் ஐம்புலன்களும் (சடமாகலின்)

தாமா அறியா — தாமாகவே யறியமாட்டா.

(அப்படியானால்)

தடம் மருதச் சம்பந்தா — வயல்கள் சூழ்ந்த மருதநகரைப் படைவீடாகக் கொண்டருளிய மறைஞான சம்பந்த மகாமுனிவரே!

யாம் — நாங்கள்

இனி — பின்னை

ஆர் — யாரை

அறிவாம் — அறியப்போகிறோம்?

ஆன்ம அறிவுக்குச் சிவம் வசமாதலில்லை; வசமாகும் உலகமோ அழிவுடையதாதலான் பயன்தராது, பின்னை அவ்வறிவு அறியப்போவது எதைத்தான்?

———:0:———

6. சிற்றறிவு முற்சிதையிற் சேர்வாரின் றாஞ்சிறிது
மற்றதனி னிற்கிலருண் மன்னுதாந், — துற்றமுகின்
மின்கொண்ட சோலை வியனமருதச் சம்பந்தா
வென்கொண்டு காண்பே னியான்.

சிற்றறிவு — ஆன்மபோதம்

முன் சிதையின் — முதலில் கெடுமாயின்

சேர்வார் — சிவனைப்பொருந்தும் ஆன்மாக்கள்

இன்று ஆம் — இல்லையாய் விடும்.

மற்று — அங்ஙனமின்றி

சிறிதும் — (அப்போதம்) கொஞ்சமாயினும்

அதனில் — ஆன்மாக்களிடம்

நிற்கில் — தங்கினால்

அருள் — திருவருளானது

மன்னுது — அவ்வான்மாக்களைப் பொருந்தாது.

(அப்படியாயின்)

துற்ற முகில் மின் — நெருங்கிய மேகத்தையும் மின்னலையும்

கொண்ட — உச்சியிலே உரிஞ்சப்பெற்ற

சோலை — (ஓங்கி வளர்ந்த) சோலைகளையுடைய

வியன் மருதச் சம்பந்தா — பெரிய மருதநகரைப் பாடிவீடாகக்கொண்டருளிய மறைஞான சம்பந்த மகாமுனிவரே!

யான் — நான்
என்கொண்டு — எந்தத்துணைகொண்டு
காண்பேன் — அத்திருவருளைப் பொருந்துவேன்?

தற்போதம் கெடவில்லையானால் ஆன்மா சிவத்தைக்காண முடியாது. தற்போதம் கெட்டால் அது சிவத்தைப் பொருந்துவது எதன் உபகாரத்தால்?

———:o:———

7. உன்னரிய நின்னுணர்வ தோங்கியக்கா லொண்கருவி
தன்னளவு கண்ணரிது தானாகு — மென்னறிவு
தானறிய வாரா தடமருதச் சம்பந்தா
யானறிவ தெவ்வா றினி.

உன்னரிய — நினைத்தற்கரிய
நின் உணர்வது — சிவஞானம்
ஓங்கியக்கால் — (ஆன்மாவின் மாட்டுப்) பிரகாசித்தால்
ஒண் கருவி தன் அளவு — ஒளிபொருந்திய மாயா கருவிக ளவ்வளவும்
கண்ணரிது — (அவ்வான்மாவைப்) பொருந்துதல் இல்லை
(அன்றியும்)
தான் ஆகும் — சிவபோதமாக மாறிய
என் அறிவு — ஆன்மபோதம்
தான் அறிய வாரா — (அந்தப்பிரகாசத்தைத்) தானாகத் தனிநின்று அறிய முடியாது.
(ஆகையால்)
தடம் மருதச் சம்பந்தா — வயல்கள் சூழ்ந்த மருத நகரைப் பாடிவீடாகக் கொண்டருளிய மறைஞான சம்பந்த மகாமுனிவரே!
இனி — பின்னை
யான் — நான்
எவ்வாறு — எந்தவிதமாக
அறிவது — (அந்தப் பிரகாசத்தை) அறிதல் கூடும்?

ஆன்மாவினிடம் சிவம் பிரகாசித்தால் தத்துவங்களத்தனையும் கழன்றுவிடும். இத்தத்துவங்களே ஆன்மாவுக்கு அறிவை யெழுப்புவன. தத்துவங்கள் நீங்கின ஆன்மாவுக்கு அறிவு விளங்காது. அப்படியாயின் அச் சிவப்பிரகாசத்தை ஆன்மா தரிசிப்பது எப்படி?

——o——

8. அருவே லுருவன் றருவே லருவன்
திருவேறு மொன்றிற் கிசையா — வுருவோரிற்
காணி லுயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுடற்
பூணுமிறைக் கென்னும் புகல்.

அருவேல் — (இறைவன்) அருவமாயின்
உரு அன்று — உருவத்தையடையான்.
உருவேல் — உருவமாயின்
அரு அன்று — அருவத்தையடையான்.
(ஏனெனில்)
ஒன்றிற்கு — ஒரே பொருளுக்கு
இரு வேறும் — இரண்டு மாறுபட்ட தன்மைகளும்
இசையா — இருத்தலில்லை (என்க.)
(ஆகையால்)
ஓரில் உருகாணில் — (ஆன்மா தன்) அறிவில் (இறைவனது) உருவத் திருமேனியைக்கண்டால்
கண்ட உடல் — கண்ட அத்திருமேனியானது
பூணும் இறைக்கு — (தன்னைத்) தாங்கிய இறைவனுக்கு
என் ஆம் — எப்படி உண்டாயிற்று?
உயர் கடந்தைச் சம்பந்தா — மிகச் சிறந்த கடந்தை நகரில் வாழும் மறை ஞான சம்பந்த மகாமுனிவரே!
புகல் — சொல்லியருளுக.

ஓர் முதனிலைத் தொழிற் பெயர்.

சிவபிரான் உருவமாயின் அருவங்கொள்ளார்; அருவமாயின் உருவங் கொள்ளார். பின்னை அவர் திருமேனி கொள்வது எப்படி?

:0:

9. இருமலத்தார்க் கில்லை யுடல்வினையென் செய்யு
மொருமலத்தார்க் காரா யுரைப்பேன் — திரிமலத்தா
ரொன்றாக வுள்ளா ருயர்மருதச் சம்பந்தா
வன்றாகி லாமா றருள்.

இருமலத்தார்க்கு — ஆணவம் கன்மம் என்னும் இரண்டு மலங்களையுடைய பிரளயாகலருக்கு
உடல் இல்லை — தேக காரணமான மாயாமலம் இல்லை.

( ஆகலின் )

வினை — அவர்களுடைய கர்ம மலமானது
என் செய்யும் — எவ்வாறு அநுபவிக்கப்படும்?
ஒரு மலத்தார்க்கு — ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலருக்கு
ஆர் ஆய் — (மாயை கன்மங்களில்லையாகலின் அவ்வாணவத்தை நீக்குவார்) யாராக உளரென்று
உரைப்பேன் — (நான்) சொல்லுவேன்?
திரிமலத்தார் — மும்மலங்களையுமுடைய சகலரோ
ஒன்றாக — அம்மும்மலங்களையு மொருங்கே
உள்ளார் — உடையார் ( ஆகலின் அவர்களது மலநீக்கத்துக்குச் சந்தேக மில்லை ).
உயர் மருதச் சம்பந்தா — உயர்ந்த மருதநகரைப் படைவீடாகக் கொண் டருளிய மறைஞான சம்பந்த மகாமுனிவரே!
அன்று ஆகில் — (பிரளயாகலர் விஞ்ஞானகலர்களுக்கு அம்மலங்கள்) நீங்குவதில்லையாயின்
ஆம் ஆறு — அவர்கள் கதியடையும் விதத்தை
அருள் — சொல்லியருளுக.

மும்மலங்களையுமுடைய சகலர்க்கே மலம் நீங்குதல் கூடும். அவற் றுள் ஒன்று குறையினும் மலநீக்கமென்பதில்லை. ஆகையால் ஒருமலமில் லாத பிரளயாகலருக்கும், இரண்டுமலமில்லாத விஞ்ஞானகலருக்கும் இரு க்கும் மலங்கள் நீங்குவது எப்படி?

———:0:———

10. ஒன்றிரண்டாய் நின்றொன்றி லோர்மையதா மொன்றாக
நின்றிரண்டா மென்னி லுயிர் நோக்கும் — துன்றிருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானுகி
போக்கியவா றெவ்வா றுரை.

ஒன்று — பரமார்த்தத்தில் ஒரே பொருளாயிருப்பது
இரண்டு ஆய் நின்று — விவகாரத்தில் பதி, பசு என இரண்டு வேறு பொரு ள்களாக நின்று
ஒன்றில் — (முத்தியில்) அத்துவிதமாகுமென்றால்
ஓர்மையதாம் — உண்மையில் அவ்விரண்டும் ஒரேபொருளாகும் ( ஆகலின் அத்துவிதமென்பதில்லை.

இரண்டு நின்று — பரமார்த்தத்திலேயே இரண்டு வேறுபொருள்களாக இருந்து
ஒன்றாக ஆம் — (முத்தியில்) அத்துவிதமாகும்
என்னில் — என்றால்
உயிர் சேர் ஆகும் — பசு (பதியோடு) சமத்துவம் அடையும் ( ஆகலின் அத்துவித மென்பதில்லை ).
(ஆகையால்)
அன்று இரும் தார் — நெருங்கிய பெரிய தாமரை மாலையை
தாங்கிய — மார்பில் தாங்கியவராகிய
தண் கடந்தை — குளிர்ச்சி பொருந்திய கடந்தைமாநகரில்
வாழ் சம்பந்தர் — வாழ்கின்ற மறைஞான சம்பந்த மகாமுனிவரே!
யான் — ஆன்மா
ஆகி — (சிவம்) ஆகி
ஓங்கியவாறு — விளங்கியவிதம்
எவ்வாறு — எப்படி?
உரை — சொல்லியருளுக.

சிவமும் ஆன்மாவும் ஒரே பொருள் எனில் தம்முட் கலக்கவேண்டியதில்லை: இருவேறுபொருள்களெனில் தம்முட் சமத்துவம் அடையும். அப்படியாயின் ஆன்மா சிவமாவது எப்படி?

——:0:——

11. காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை
காணார்க ணன்முத்தி காணார்கள் — காண்பானுங்
காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்.

காண்பானும் — ஞாதாவும்
காட்டுவதும் — ஞானமும்
காண்பதுவும் — ஞேயமும் (என்னும் இம்மூன்றையும்)
நீத்து — கைவிட்டு
உண்மை — சிவத்தை
காணார்கள் — தரிசியாதவர்கள்
நல் முத்தி — சிவானந்தத்தை
காணார்கள் — அடைந்தனுபவியார்கள்.

தண் கடந்தைச் சம்பந்தன் — குளிர்ச்சிபொருந்திய கடந்தைமாநகரின்
வாழ்கின்ற மறைஞானசம்பந்த மகாமுனிவரது

வாட்டு நெறி — நல்ல ஞானமார்க்கத்தில்

வாராதவர் — நில்லாதவர்களிடத்தில் தான்

காண்பானும் — ஞாதாவும்

காட்டுவதும் — ஞானமும்

காண்பதுவும் — ஞேயமும் ( என்னும் இம்மூன்றும் இருக்கும் ).

ஞாதா யானென்னும் ஆன்மா.

ஞானம் எனதென்னும் ஆன்மஞானம்.

ஞேயம் அந்தஞானத்துக்கு விடயமாயிருக்கும் பொருள்.

இங்ஙனம் பகுத்துக் காண்பது மலவாசனையேதுவால் வந்த மயக்கவுணர்வு. இவ்வுணர்வுக்குச் சிவம் பிரகாசித்தல் இல்லை. ஆகையால் ஆன்மாவுக்கு முத்திப்பேறு கிடைப்பது எவ்வாறு?

———:o:———

12. ஒன்றி நுகர்வதிவ னூணு முறுதொழிலு
மென்று மிடையி லிடமில்லை — யொன்றித்
தெரியா வருண்மருதச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவா றெவ்வாறு பேசு,

இவன் — ஆன்மா ( பெத்தத்தில் )

ஊணும் — அறுசுவையுணவுகளையும்

உறு தொழிலும் — தனக்குப் பொருத்தமான சரசலீலைகளையும்

ஒன்றி — பொருந்தி

நுகர்வது — ( இன்பத்தை ) அனுபவிப்பது ( பிரத்தியக்ஷம் )
( அதுபோல் )

என்றும் — அநாதியாகவே

இடையில் இடம் இல்லை — ( ஆன்மாக்களோடு ) இடையீடில்லையென்னும்
படி

ஒன்றி — அத்துவிதமாகக் கலந்து

தெரியா — ( அவைகளது சுட்டுணர்வால் ) காணப்படாமல்

அருள் — அருளைப்புரிகின்ற

மருதச் சம்பந்தா — மருதநகரைப் படைவீடாகக்கொண்டருளிய மறை
ஞான சம்பந்த மகாமுனிவரே!

சேர்ந்து — (ஆன்மா முத்தியில் சிவத்தோடு) அத்துவிதக் கலப்பெய்தி
பிரியாவாறு — பிரியாமல்
எவ்வாறு — எப்பொருளை அனுபவிப்பதனால் இன்பம் அடையும்?
பேசு — சொல்லியருளுக.

பெத்தத்தில் இன்பந்தருவன உணவு முதலியவை. முத்தியில் இன்பந் தருவது யாது?

———:o:———

13 அருளா லுணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித் — தெருளா
வினாவெண்பா வுண்மை வினவாரே லூமன்
கனாவின்பா லெய்துவிக்குங் காண்.

அருளால் — ஆசாரியனது அநுக்கிரகத்தினாலே
உணர்வார்க்கு — ஞானம் பெற்றவர்களுக்கு
அகலாத — அவர்களை விட்டு நீங்காத
செம்மை பொருள் ஆகி — உண்மைப்பொருளாக வெளிப்பட்டு
பொருந்தி — அவர்களறிவிற் கலந்து
நிற்கும் — (சிவம்) பிரகாசிக்கும்.

(அவ்வநுக்கிரகம் பெறாதார்)

தெருள் ஆ — அறிதற்கு உபகாரமாகிய
வினா வெண்பா — இவ் 'வினாவெண்பா' வினுள்ள வினாக்களுக்கு
உண்மை — விடைகளை
வினவாரேல் — தெரிந்துகொள்ளாராயின் (அவரது வித்தை)
ஊமன் — ஊமையன்
கனாவின் — கனாவிற் குடிக்கின்ற
பால் — பாலைப்போல
எய்துவிக்கும் — (பயனின்மையைத்) தரும்
காண் — (நீ இதை) அறிவாயாக

தெருள் முதனிலைத் தொழிற்பெயர்.

இந்நூலிலுள்ள வினாக்களுக்கு விடை தெரிவோரே சித்தாந்த சைவ நூற்களை நன்கு பயின்றவராவார்.

வினா வெண்பாப் பதவுரை
முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.
ஸ்ரீ உமாபதி சிவந் திருவடி வாழ்க.

———:o:———